ஸ்ரீ அழகியசிங்கர் நூற்றாண்டு மலர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

மார்கழி மாலை.

திருவல்லிக்கேணித்
தமிழ்ச்சங்க வெளியீடு, 31.

சங்கக் காரியாலயம் :

ஆநந்தபிருந்தாவநம்,
ஸ்ரீ மௌனசுவாமிகள் மடத்துத் தெரு,
அம்பத்தூர்.

25-12-1951.

ஸ்ரீ:

திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கப் பிரசுரம்.

இலக்கம்.	வெளியீட்டின் பெயர்.	வள்ளலார் பெயர்.
1.	ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் வைபவம்.	ஸ்ரீமான் வி. யன். சிங்காரவேலு முதலியார் அவர்கள்.
† 2.	தேசிகர் நூற்றந்தாதி.	ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்கார் அவர்கள்.
3.	மறைமுடித் தேசிகனார்.	ஸ்ரீமான் சுந்தரசேகர நாயக்கர் அவர்கள்.
4.	மணவாள மாமுனிகள்.	ஸ்ரீமான் ஸி. நரஸிம்மாசாரியார் அவர்கள்.
5.	அழகர் மாலை.	நற்றமிழன்பர்கள்.
6.	வேதாந்த தேசிக ரூசல்.	ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்கார் அவர்கள்.
7.	தோத்திர மாலை.	ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்கள் திருத்தேவியார் ஸ்ரீரங்கநாயகி அம்மாள்.
† 8.	தொண்டர் மாலை.	ஸ்ரீபண்டித சிந்தாமணி கோபாலய்யங்கார் அவர்கள்.
9.	கம்பர் மாலை.	ராவ்ஸாஹெப். ஆர். ராமஸ்வாமி அய்யங்கார் அவர்கள்.
10.	பரிமுக மாலை.	ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸராகவாச்சாரியார் அவர்கள்.
11.	ஸ்ரீ ஆண்டாள் மாலை.	ஸ்ரீமான் பி. எஸ். திருமலை அய்யங்கார் அவர்கள்.
12.	ஸ்ரீ பார்த்தசாரதி மாலை.	ராவ்பஹதூர் கே. ஆர். ராமாநுஜம் அவர்கள்.
† 13.	திருவருண் மாலை.	ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்கார் அவர்கள்
† 14.	தூப்புல் வள்ளல் பழமொழிச் சிறப்பு.	ப. ரெ. திருமலை அய்யங்கார்.
† 15.	அடைவு அமைக்கும் அற்புதன்.	ப. ரெ. திருமலை அய்யங்கார்.
† 16.	தமிழர் தொழு வேதாந்த வாசிரியன்.	ஸ்ரீமான் டி. எஸ். பார்த்தசாரதி அய்யங்கார் அவர்கள்.

ஸ்ரீ :

ஸ்ரீமதேராமாநுஜாய நம:



மார்கழி மாலை.

திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்க வெளியீடு–31.

இது

ஸ்ரீ அஹோபில மடம் 40-ஆம்பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாப நாசார்ய பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரோபய வேதாந்தாசார்ய ஸ்ரீபகவத் ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வபௌம ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்யபாதுகா ஸேவக ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ரங்கநாத சடகோபயதீந்த்ர மஹா தேசிகன் நூற்றுண்டுத் திரு நக்ஷத்திரத் திருநன்னாளாகிய ஸர்வ மங்கள கரவாண்டு மார்கழித் திங்கள் ஈரைந்தாந் தேதி திருவிசாகத் தன்று திருவல்லிக்கேணி ரத வீதியிலுள்ள திருவஹோபில மடத்திரு நரசிங்கன் திரு வடிவாரத்தில்

இடப்பெற்ற காணிக்கை.

25–12–1951.

முதற் பதிப்பு—1951

Kabeer Printing Works, Madras (1825)

ஸ்ரீ:

உள்ளுறை.

	பக்கம்.
முகவுரை.	1
[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரெ. திருமலை அய்யங்கார், தமிழ் வித்துவான், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.]	
மார்கழித் திங்கள்.	23
நாச்சியார் நாடகம்.	36

சீதமுறு முகில்காவி யெட்பூ மதிக்குழவி
திகழ்முல்லை செந்தாமரை
சீர்வள்ளை யாடிவண் குமுதம்வார் சிலைதுவர்
செழுங்கமுகு கோங்கரும்பு
கோதறு பசுங்கிள்ளை காந்தண்மாந் தளிரொல்கு
கொடிகதலி தேரென்றுநற்
குணமழிந் தடியேனை னைதல்கண் டருள்செயாக்
கொள்கைநன் றன்றுபணிவோர்
பாதகங் களைமயிலை திகழலிக் கேணியாம்
பதியில்வாழ் தாமோதரா
பார்க்குள்யா வருமுய்ய மார்க்கமே யருள்துய்ய
பார்த்தசா ரதியையனே. (2)

புவனமகிழ் தரவரும் பொய்கைபேய் பூதனொடு
புகன்மாறன் மதுரகவிவண்
புகழ்மலி யருட்பாணன் மழிசைமன் னடியர்காற்
பொடியெழிற் குலசேகர
னவமிலகு விண்டுசித் தன்கோதை வாட்கலிய
னவின்மறைத் தமிழ்மாலையு
நறைபெருகு பைந்துளவ மாலையு மணக்குநின்
னளினபா தந்துதித்தற்
குவகைதினை யளவுமெற் கின்மைமுற் சன்மத்
துளுற்றிய வினைத்திறன்கொ
லுரைசெய்மணி முடியரவின் மேற்றிருக் கண்வளரு
முவணகே தனமாதவா
பவமரண மகலவருள் புரியலிக் கேணியாம்
பதியில்வாழ் தாமோதரா
பார்க்குள்யா வருமுய்ய மார்க்கமே யருள்துய்ய
பார்த்தசா ரதியையனே. (3)

அரங்கந் திருத்தஞ்சை யாதனூர் பேர்நக
ரனந்தபுர மூழிக்கள
மாசில்வண் பரிசார நாவாய் கடித்தான
மத்திகிரி பவளவண்ணம்

வரந்தங்கு தண்கா திருக்கோவ லூர்துவரை
வதரியாச் சிரமம்வெஃகா
வடமதுரை கங்கைக் கரைக்கண்டம் வேங்கடம்
வல்லவாழ் மன்னுகண்ண
புரங்குலவு நாகைவை குந்தவிண் ணகரமொண்
புல்லாணி புலியூரெனப்
புகலுமிப் பதிகள்போ லெனதுநெஞ் சினுநீ
புகுந்துநற் கருணைபுரிவாய்
பரம்பொரு ளெனத்தேவர் பரவலிக் கேணியாம்
பதியில்வாழ் தாமோதரா
பார்க்குள்யா வருமுய்ய மார்க்கமே யருள்துய்ய
பார்த்தசா ரதியையனே. (4)

பதுமநா பாமுகுந் தாகேச வாகண்ண
பத்தவச் சலராகவா
பரமபுரு டாரட்ச காவாசு தேவவரி
பவநாச சார்வபௌமா
மதுசூத னவச்சு தாசீத ராநீல
மணிமேக வண்ணமாயா
வடபத்திர சயனதே வகிநந்த னவிபுத
வந்திதா நாராயணா
பொதுவர்நிரை யுளநலிதல் கண்டுகுடை யாகப்
பொருப்பைமுன் னெடுத்த
பூதேவி நாயகா வெனவாழ்த்து வோர்க்கடிமையாம்
புரியவடி யேற்கருளுவாய்
பதின்மர்தமிழ் மறையினொலி குலவலிக் கேணியாம்
பதியில்வாழ் தாமோதரா
பார்க்குள்யா வருமுய்ய மார்க்கமே யருள்துய்ய
பார்த்தசா ரதியையனே. (5)

—(அஷ்டாவதானம் - திவ்யகவி ஸ்ரீமத் - முத்தழகையங்காரவர்களியற்றிய ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் பஞ்சரத்நம்.)

கூடுறை பசுங்கிளிக் குசிதமொழி சொல்லிக்
கொடுத்தந்த மொழி யச்சுகம்
கூறுகா லேயில்வினவி மகிழுமவர் போலவே
கோகனக ஞதி யிமையோர்
நாடுதற் கரியநீ யென்மனத் தாமரையி
ஞெடொறு மிருந்து தமிழ்நால்
நலத்தையறி வித்தற்ப ஞகிய வெனேக்கொண்டு
நாளு விதக்க விகளேப்
பாடுவித் திருசெவிக் கொண்டுளங் களிகொள்வை
பலகாலு முன்வி நோதம்
பகரவச மோகடவு ளன்னமே யென்னமே
பரிதியைக் கோ புரதலத்
தாடுகொடி தொடுகச்சி யருளாளர் கண்மணியி
னகலா துலாவு பாவாய்
அடியவர்க் காவியே யதுலசஞ் சீவியே
யழகிய பெருந் தேவியே. (11)

—(பொற்களந்தைப்பதி முத்தமிழ்க்கவி வீரராகவ முதலியாரவர்கள் இயற்றிய திருக்கச்சி நகர் பெருந் தேவித் தாயார் பதிகம்.)

உலகிற் பிறந்த ஒவ்வொருவரும் முக்கியமாக அறிய வேண்டுவன தத்துவம், ஹிதம், புருஷார்த்தம் என்பன. தத்துவங்களே உள்ளவாறு அறிந்து, ஹிதங்களுள் ஒன்றை அநுஷ்டித்து, புருஷார்த்தத்தைப் பெற முயல்வதே அறிவுடைய மாந்தர் கடன். தத்துவங்களெல்லாந் தகவால் அறிவித்து முத்தி வழி தருபவரே ஆசார்யர்கள். தத்துவங்கள் மூன்று. அவையாவன :—சேதநம், அசேதநம், ஈசுவரன் என்பவை. அறிவுள்ள ஜீவாத்மா சேதநன் எனப்படுவான். அறிவில்லாத வஸ்து அசேதநம் எனப்படும். அசேதநத்தால் கிடைக்கக்கூடிய பலனே அநுபவிப்பவன் சேதநனே. இந்த அசேதநம் த்ரிகுணம், காலம், சுத்தஸத்துவம் என மூன்று வகைப்படும். ஸ்ரீமந் நாராயணனே ஸர்வேசுவரன்.

திருநா ரணனெனுந் தெய்வமுஞ் சித்து மசித்துமென்று
பெருநான் மறைமுடி பேசிய தத்துவ மூன்று.
—(தேசிகமாலை. அமிருதரஞ்சனி. 10)

காரணமா யுயிராகி யனைத்துங் காக்குங்
கருணைமுகில் கமலையுட னிலங்கு மாறும்
நாரணனார் வடிவான வுயிர்க ளெல்லா
நாமென்று நல்லடிமைக் கேற்கு மாறுந்
தாரணிநீர் முதலான மாயை காலந்
தனிவானென் றிவையுருவாந் தன்மை தானுங்
கூரணிசீர் மதியுடைய குருக்கள் காட்டக்
குறிப்புடனாங் கண்டவகை கூறி னோமே.
—(தேசிகமாலை. அமிருதரஞ்சனி. 11)

நாரா யணன்பர னாமவ னுக்கு நிலையடியோஞ்
சோரா தனைத்து மவனுடம் பென்னுஞ் சுருதிகளாற்
சீரார் பெருந்தகைத் தேசிக ரெம்மைத் திருத்துதலாற்
றீரா மயலகற் றுந்திறம் பாத்தெளி வுற்றனமே.
—(தேசிகமாலை. அமிருதரஞ்சனி. 17)

தேற வியம்பினர் சித்து மசித்து மிறையுமென
வேறு படும்வியன் றத்துவ மூன்றும் வினையுடம்பிற்
கூறு படுங்கொடு மோகமுந் தானிறை யாங்குறிப்பு
மாற நினைந்தரு ளான்மறை நூறந்த வாதியரே.
—(தேசிகமாலை. அதிகாரசங்கிரகம். 12)

என்ற சந்தமிகு தமிழ் மறையோன் தூப்புல் தோன்றும் வேதாந்த குரு மொழிகள் இவண் அநுஸந்தேயம்.

காலம் என்பது எங்கும் பரந்து நிற்கும் ஒரே த்ரவ்யம். இதில் ஸத்துவம் முதலிய குணங்களில. எதிர், நிகழ், கழிவு முதலிய வியவஹாரங்களுக்கு இதுவே காரணமாகும். நிமிஷம், விநாடி, நாழிகை முதல் பரார்த்தம் வரையிலுள்ள பாகங்களனைத்தும் இந்தக் காலத்தினுடையனவே. இக்கர்ம பூமியிலுள்ள மாறுபாடு கள் யாவும் இந்தக் காலத்தின் நியமத்திற்கு உட்பட்டே எம்பெரு

மானுடைய ஸங்கல்பத்தால் நடப்பன. ஸ்ரீ வைகுண்டத்தில் முன் பின் என்ற அளவிற்குக் காலம் உளதேயாயினும் அதன் ஸம்பந்த மின்றி அனைத்தும் அரவிந்தலோசனனது ஸங்கல்பத்தால் மட்டும் நடப்பனவாகும். "இப்படி மஹதாதிகளான தத்துவங்களும் இவற்றின் கலசுதலடியாகப் பிறக்கும் அநந்தங்களான ப்ரஹ்மாண் டங்கள் முதலான கார்யங்களு மெல்லாம் த்ரிகுணத்ரவ்யமாகிற பெருங்கடலில் அலைகளும் நுரைகளும் குமிழிகளும் போல ஆவ தழிவதாய் வருகிற ப்ரவாஹமநாதியாக விச்சேதமறப் பொருகைக் கடி பலபல மாயமயக்குக்களால் இன்புறு மிவ்விளையாட்டுடையா னுடைய இச்சாநுவ்ருத்தியான காலம். காலமநாதியாய் அநந்த மாய் நடக்குமென்னுமிடத்தை அநாதிர் பகவாந்கால: இத்யாதி களிலே கண்டுகொள்வது. காலமாவது—எதிர் நிகழ் கழிவெனும் முன், பின், ஒரு காலம், பலகாலம் என்னுப்போல சொல்லுகிற பாசுரங்களுக்கு இலக்காகியிருப்ப தொருத்ரவ்ய விசேஷம். இதி லிறைப் பொழுது முதலாக நாள் திங்கள் ஆண்டூழிகல்பம் பரார்த் தம், த்விபரார்த்தம், மஹாகல்பம் என்றுற்போல சொல்லுகிற எல்லைகளெல்லாம் ஸ்வதந்த்ர ஸங்கல்பமாகிற சூறுவளிக் காற்றுப் போலே சுழன்று வாராநின்றுல் கழிந்த க்ஷணங்களெல்லாம் கல் பங்களும் வரும் க்ஷணங்களும் கல்பங்களும் அநந்தங்களாய் இவற் றுலே லீலாவிபூதியிலுள்ள கார்யங்களுக்கு உத்பத்திஸ்திதி நாசவ்ய வஸ்தை யுண்டாயிருக்கும். சுத்தஸத்வத்தில் இக்கால தத்துவ முண்டேயாகிலும் அங்குள்ள கார்யங்களினுடைய உத்பத்யாதி களுக்கு இங்கடைத்த காலவிசேஷநியாயாமகமன்று". (தத்வ மாத்ருகா) என்ற தூப்புல்துரந்தரன் தூமொழிகளை இங்கு நினைக.

கல்வியிற் பெரிய கம்பநாட்டாழ்வான் தாமியற்றிய இராமா வதாரத்தில் சரபங்கமுனிவரது வாயிலாக

சிறுகா லையிலா நிலையோ திரியா
குறுகா நெடுகா குணம்வே றுபடா
வுறுகால் கிளர்பூ தமெலா முகினும்
மறுகா நெறியெய் துவென்வா னுடையாய்.

—(ஆரணியகாண்டம். சரபங்கர் பிறப்பு நீங்கு படலம். 20)

[தேவலோகத்தை உடையவனே! சிறு காலவரையறையில் லாமலும், நிலைமை வேறுபடாமலும், சுருங்குதலும் வளர்தலு மில்லாமலும், குணம்வேறுபடாமலும், பெரிய காற்றினால் விளங்கு கின்ற எல்லாப் பூதங்களும் அழிந்தாலும், அக்காலத்திலும் அழி யாமலுள்ள பதவியை, பரமபதத்தை, யான் அடைவேன். நிமி ஷம், காஷ்டை, கலை, நாழிகை, முகூர்த்தம், நாள், பக்ஷம், மாதம், இருது, வருடம், யுகம் முதலிய காலவரையறை பரமபதத் தில் இல்லை யாதலால் 'சிறுகாலையிலா' என்றும், இளமை, முதுமை முதலிய பருவ வகைகள் அங்குள்ளார்க்கு இல்லாமை யால் 'நிலையோதிரியா' என்றும், தன்னடைவிலாதல், காலவசத் தாலாதல், சுருக்கமும் பெருக்கமுமில்லை யாதலால், 'குறுகா நெடுகா' என்றும், முக்குணங்களும் மாறிமாறி வராது சுத்த சத்துவ குணமயமாகவே யிருத்தலால் 'குணம் வேறுபடா' என் றும், ஸ்ரீ மஹாவிஷ்ணுவினது திருமுகத்தினின்றும் ஒரு மூச்சுக் காற்று உண்டாகி நூறுண்டளவும் வீசிக் கொண்டிருந்து அனைத் தையும் அழிக்கின்ற அப்பிரளய காலத்திலும் அழிவில்லாது நித் தியமாயிருத்தலால் 'உறுகால்கிளர் பூதமெலாமுகினும் மறுகா நெறி' என்றுங் கூறினர். உகுதல் - அவ்வவை தோன்றிய விடத்தே ஒடுங்குதல். கால் - வழி, பலவழிப்பட்ட பூதங்கள். மறுகாநெறி - மோக்ஷம்.]

என விளக்கி யுள்ளமை கண்டு இன்புறற் பாலது.

மாதங்களிற் சாலச்சிறந்தது மார்கழி. கீதோப நிடதத்தில் கண்ணபிரான்தானே

ப்ருஹத்ஸாம ததாஸாம்நாம்
காயத்ரீம் சந்தஸாமஹம்,
மாஸாநாம் மார்கசீர்ஷோஹ
ம்ருத்யூநாம் குஸுமாகர:

—(பத்தாவது அத்தியாயம். 35)

[சாமவேத கானங்களிற் பிரகத்ஸாமம் என்னும் ஸாமமும், சந்தஸ்களிற் காயத்திரி யென்னும் சந்தஸும் நான்; அவ்வாறே மாதங்களில் மார்கழி மாதமும் ஷட்ருதுக்களில் வசந்தருதுவும் நான். அது அகில பிராணிகளுக்கும் ஸுகமாயிருக்கும்.]

இச்சுலோகத்துக்குரிய தமிழ்ப்பாடல்கள் பின் வருமாறு :—

சாமங் களிற்பெரிய சாமநான் சந்தத்திற்
சேமஞ்செய் காயத் திரிதானு—ணுமஞ்சேர்
மாதத்து மார்கழிநான் வாய்ந்திருது வானவற்றுண்
மீதத் தினிவசந்தன் மிக்கு.

—(வாதிகேசரி ஸ்ரீ அழகிய மணவாள ஜீயர் அருளிச்செய்த பகவத்கீதை வெண்பா. அத்தியாயம் 10, விபூதியோகம். 36)

[பெரியஸாமம் - ப்ருகத்ஸாமம்; சந்தம் - சந்தஸ்; வசந்தன்-வஸந்தருது.]

பெண்களிற்புகழ் திருச்சொன் மேதைபொறை
திண்மைபேசு மறமென்னவே
யெண்பகுத்தவெழு வோருநானிருது வாறில்
வந்தவிள வேனில்யா
னண்பனற் பெரியசாம னுரிய
சாமமேழினு நலத்தினன்
மண்களிற்பெரிய திங்களிற் புகழ
நின்றமார் கழியுமற்றுநான்.

—(பட்டனர் பகவத்கீதை. விபூதி விஸ்தாரயோக அத்தியாயம். 22)

சாமத்து ளேபிருகற் சாமமும்நான் சந்தத்துள்
தோமறுகா யத்திரிநான் தூயாய்கேள்—தீமையறு
மாதத்துள் மார்கழியும் மாசில்இரு துக்களுளே
போதுற்ற வேனிலும்யான் போற்று.

—(சா. முத்து ஐயர். ஸ்ரீ பகவத்கீதைவெண்பா. 10. விபூதியோகம். 35.)

ஆழ்வார்கள் அகமகிழ்ந்து பாடும் துய்ய தமிழ் மாலைகள் இருபத்து நான்கிற்கும் வ்யாக்யாநம் இட்டருளிய பரம காருணிகரான பெரியவாச்சான்பிள்ளை திருப்பாவை மூவாயிரப்படியில், "[மார்கழித் திங்கள்.] 'நாதிசீதா நகர்மதா' என்கிற ந்யாயத்

தாலே அத்யுஷ்ணமாதல் அதிசீதளமாதலன்றிக்கே யிருக்கும் மாஸம்; நாளுக்கு ப்ராம்ஹ முகூர்த்தம்போலே ஸம்வத்ஸரத்துக்கு இம்மாஸமாகையாலே ஸத்த்வோத்தரமான காலம். 'மாஸா நாமார்கசீர்ஷோஹம்' என்று—'மாஸங்களில் வைத்துக்கொண்டு மார்கழி மாஸமாகிறேன்' என்று அவன்தானே அருளிச் செய்கையாலே, வைஷ்ணவமானமாஸம்; ஸர்வ வஸ்துக்களும் அங்குரிக்குங் காலமாகையாலே, தங்களுடைய உந்மேஷத்துக்கு அர்ஹமான காலம். [மார்கழித் திங்கள்] கோபவ்ருத்தர் குளிருக்கு அஞ்சிப் புறப்படமாட்டாத காலம்.

தங்களுக்கு உத்தேச்யம் கிடக்கக் காலத்தைக் கொண்டாடுகிறதென்னென்னில்?—'சைத்ரச்ச்ரீமாநயம்மாஸ:' என்று—ஒரு ஸம்ருத்தியைப் பற்றக் காலத்தைக் கொண்டாடிற்றிறே. [சைத்ர:] அல்லாதாரிற் காட்டில் பெருமாளுக்கு உள்ள ப்ராதாந்யம்போலே மாஸங்களெல்லாவற்றுக்கும் முதலான மாஸம். [ஸ்ரீமாந்] அவர் எல்லோருக்கும் ராஜாவாக ப்ராப்தராளுற்போலே, சைத்ரமாஸம் ஸர்வர்க்கும் ஸுககரமாகையாலே, மாஸங்களுக்கெல்லாம் ராஜாவென்கிறது. [அயம் மாஸ:] அபிஷேக மநோரத ஸமயத்திலே ஸந்நிஹிதமான தன்னேற்றம். அங்கு, சேஷியை சேஷபூதர் லபிக்கைக்குக் கொண்டாடுகிற கொண்டாட்டம்; இங்கு, சேஷபூதரை சேஷி லபிக்கைக்குக் கொண்டாடுகிற கொண்டாட்டம். [புண்ய: புஷ்பிதகாநந:] 'பாவநஸ்ஸர்வலோகாநாம்த்வமேவ' என்றும், 'பும்ஸாம் த்ருஷ்டி சித்தாபஹாரிணம்' என்றும் அவர்க்கு இரண்டாகார முண்டாளுற்போல, இக்காலமும் பாவநமுமாய் போக்யமுமாயிருக்கை. [புஷ்பிதகாநந:]—படை வீடு போலே நாம் அலங்கரிக்க வேண்டாதேதானே அலங்கரிக்கை. [புஷ்பிதகாநந:] பெருமாள் பொன் முடி சூட, காடு பூ முடி சூடிற்று.'' என்று மார்கழித் திங்களின் ஏற்றத்தைக் கொண்டாடியிருத்தல் காண்க.

திருநாராயணபுரம் ஆய் என்கிற ஜநந்யாசார்ய ஸ்வாமி அருளிச் செய்த நாலாயிரப்படி வ்யாக்யாநம் பின்வருமாறு:—

''முதற்பாட்டு: ப்ரபந்த தாத்பர்யமான ப்ராப்ய ப்ராபக ஸங்க்ரஹம். காலத்தைக் கொண்டாடுகிறதென்றும் சொல்லுவார்கள். (மார்கழி)—'ஒழிவில்காலம்' என்றும் 'அநாதிர்பகவாந்

காலः' என்றும் காலத்தைக் கொண்டாடினாற்போலே மாஸத்தைக் கொண்டாடுகிறது. க்ஷுத்ர விஷயங்களில் புக்கால் 'ஸமயம் பண்ணின காலம் அறவற்றே' என்றிருக்கும். குணாதிக விஷயங்களில் இழிந்தார்க்கு புஜிக்கிற விஷயத்தில் அக்காலந் தன்னைக் கொண்டாட வேண்டும்படியிருக்கும். ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் எம்பெருமானார் கேட்டருளியிருக்க 'ஒழிவில் காலமெல்லாம் ஒழிவில் காலமெல்லாம்' என்றிஞ்ஞனே ஒரு நாளெல்லாம் பாடிப் பாடிக் கண்ண நீரோடே விட்டுப்போம். (மார்கழி) மழையின்றிக்கே இட்ட பயிர் தீய்தல், வெள்ளமாய் இட்ட பயிர் அழிதல் செய்யாத காலம். மலையுச்சியில் கிடந்த பீஜங்களோடு நிலத்தில் கிடந்த பீஜங்களோடு வாசியற எல்லாம் பருவம் செய்யும் காலம். (திங்கள்) ஒரு நாளில் ப்ராஹ்ம முகூர்த்தம் போலே ஸம்வத்ஸரத்தில் ப்ராஹ்ம முகூர்த்தமென்றும், 'ப்ராஹ்மே முகூர்த்தே சோத்தாய சிந்தயேதாத்ம நோஹிதம்' என்றும், வெளிறு கழிந்துநிலை நின்ற தர்மத்தையிறே இவர்கள் சிந்திக்கிறது. 'மாஸாநாம் மார்கசீர்ஷோஹம்' என்று வைஷ்ணவமான மாஸம். திருவத்யயநம் தொடங்கும் காலமிறே. 'சைத்ரச்ச்ரீமாநயம்மாஸः' இதொரு காலமே! என்கிறது. ஜகத்தடைய வாழ்விக்கும் காலம். [புண்யः] புண்யமும் தானே. அதாவது அவனை யழைத்துத் தரும் காலம் [புஷ்பிதகாநநः] படை வீடு போலே நாம் விதானிக்க வேண்டாது தானே அலங்கரித்தது. வ்யதிரேகத்தில் 'அபிவ்ருக்ஷாः பரிம்லாநாः' இறே. அன்றிக்கே பாதகரான இடையர் உறங்குங்கால மென்றுமாம். 'ஸந்த்யைதப்பிற்று' என்று ப்ராஹ்மணரைப் போலே அகரணேப்ரத்யவாய மில்லாமையாலே உணரார்கள்.''

மேலும் மார்கழி மாதத்தின் உயர்த்திக்குக் காரணங்கள் பல. மழை என்கிற குழந்தையைக் கர்ப்பத்தில் வைக்கிறகாலம். அதாவது, இத்திங்களில் மேகங்கள் சஞ்சரிப்பதைப் பார்த்து அடுத்தவாண்டில் மழை பொழிவதை ஜனங்கள் அறிகிறார்கள். கேசவன் முதலான ஈராறு அவதாரங்களுக்குள் ஆதியான கேசவனுடைய மாதம் இது. அப்போது தேவதைகளுக்கு இரவு முடியும் காலம்; விரதங்களை ஆரம்பிக்கும் காலம்.

இத்திங்களை சூடிக்கொடுத்த சுடர்க்கொடியான ஸ்ரீ ஆண்டாளின் மாதமெனின் அது சாலப்பொருந்தும். மார்கழித்திங்களில் எங்கும் சங்கத்தமிழ்மாலை முப்பதுமே முழங்கி வருவது இன்றளவும் காண்பதோரருண்மை. இத்தகைய சீரும் சிறப்பும் வாய்ந்த இத்திங்களின் மேன்மையைக் குறித்து "மார்கழித்திங்கள்" என்றதோர் ஆராய்ச்சிக் கட்டுரையும், திருப்பாவை என்ற கோதோபநிடதம் பழந்தமிழ் இலக்கண இலக்கியங்களின் அளவே நின்று நோக்கும் வித்துவான்களால் நாடகத்தமிழ்நூலாகக் கொள்வதற்கு உரியது என்பதை விளக்கிக் காட்டும் "நாச்சியார் நாடகம்" என்றதொரு கட்டுரையும், "மார்கழி மாலை" என்ற திருநாமத்தோடு இச்சங்கவெளியீடாகப் பிரசுரிக்கலாயிற்று.

உலகெலாம் உவந்து போற்றும் ஸ்ரீ அஹோபிலமட திவ்ய ஆஸ்தானத்தில் நாற்பதாவது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்து செந்தனிக்கோன்முறை செலுத்தி எம்மை உய்யக் கொண்ட மஹாநுபாவர் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹதிவ்யபாதுகாஸேவக ஸ்ரீவண்சடகோபஸ்ரீ ஸ்ரீரங்கநாதசடகோப யதீந்த்ர மஹாதேசிகன். இச்சீரிய வள்ளலார் வங்கிபுரத்து நம்பிகள் திருவம்சத்தில் பாரத்வாஜ கோத்திரத்தில் "பொன்திணிந்த புனல் பெருகும் பொருநையெனும் திருநதி" என்று கவிச்சக்ரவர்த்தியாகிய கம்பர் பெருமானால் சிறப்பிக்கப் பெற்ற தாம்பிரபரணி நதிதீரத்திலுள்ள காருகுருச்சி என்னும் அக்ரஹாரத்தில் இற்றைக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் ஜ்ஞாநாநுஷ்டாந வைராக்கிய நிதியாயுள்ள ஸ்ரீ வேங்கடவரதாசார்ஸ்வாமியின் திருக்குமாரராக அவதரித்தருளினர். இவர் பூர்வாச்ரமம்: காரைக்குரிச்சி வங்கீபுரம் வித்வாந். ஸ்ரீ உ. வே. வெங்கடகிருஷ்ணமாசார்யஸ்வாமி; திருநக்ஷத்திரமும் திருஅவதாரமும்: விரோதிகிருது, வருஷம் மார்கழிமாதம் ஆருந்தேதி வெள்ளிக்கிழமை, விசாகம் 1851, டிசம்பர்; ஆஸ்தானத்திற்கு எழுந்தருளினகாலம்: பிரமாதீசவருஷம் சித்திரைமாதம் 5உ சுக்லபக்ஷம்துவாதசி (17-4-1913); செய்தருளின கிரந்தங்கள்: ஸ்ரீ பாஷ்யார்த்த மணிப்ரவாளதீபிகை, ஸ்ரீ ஸத்ஸம்ப்ரதாயப்ரகாசிகை, ஸ்ரீ பாஷ்ய தூஷணபரிஹாரம் முதலியன; திருநாட்டிற்கு எழுந்தருளின

காலம் : துந்துபிவருஷம் தையொருதிங்கள் முதல்தேதி, கிருஷ்ண பக்ஷம் த்ரயோதசி (14–1–1923) ; ஆஸ்தானநிர்வாஹகாலம் : 9 வருஷம் 9 மாசம் ; ப்ருந்தாவனம் : மதுரைக்கடுத்த துவரிமான் அக்ரஹாரத்தில் பரிபாடல் போற்றும் வையை நதிக்கரையின்மேல்; திருப்பிரதிட்டை செய்தருளின அக்ரஹாரம் : ஸ்ரீரங்கநாதசட கோபபுரம் ; மங்களம் : விரோதி க்ருத் தநுர்மாஸ விசாகாதார ஜந்மநே, ஸ்ரீரங்கேச சடாராதி யதீசாநாய மங்களம்.

தனியன்.

ஸ்ரீமச்சடாரி யதிசேகர லப்தபோதம்
ஸ்ரீரங்கநாத யதிதுர்ய க்ருபைகபாத்ரம்,
ஸ்ரீமத்பராங்குச யதீந்த்ர தயாவலம்பம்
ஸ்ரீரங்கநாத சடகோப முநிம்பஜாம:

'' தனியன்களில் ஆசார்யனுடைய குணங்களை ஸங்கிரஹமாகவும், விசதமாகவும், சாப்தமாகவும், ஆர்த்தமாகவும் அநுஸந்திக்கும்படி பதங்கள் அமையப்பெற்றிருக்கும். இதில் நாம் அநுஸந்திக்க வேண்டியதையும் அநுஸந்திக்கும் பிரகாரத்தையும் விவரிப்போம். இந்த சுலோகம் நான்கு பாதமாய் பாதம் ஒன்றுக்கு பதினன்கு அக்ஷரமுள்ளதாக அமைந்திருக்கிறது. '' ஸித்தம் ஸத்ஸம்ப்ர தாயே '' என்ற சுலோகத்தில் பதினன்கு குணங்களை எடுத்துச் சொல்லியிருப்பதால் ஒவ்வொரு பாதமும் பதினன்கு எழுத்தோடு கூடி நான்காவது பாதத்தில் திருநாமமும் மற்ற மூன்று பாதங் களில் குணப்ரகாசமான விசேஷணங்கள் அமைந்திருப்பது பற்றி யோசிக்குமிடத்தில் அந்த சுலோக விவக்ஷிதமான பதினலு குணங்களும் பொருந்தியிருப்பதை '' ஸத்யம் ஸத்யம் புநஸ் ஸத்யம் '' என்ற முறையில் மூன்று தரம் சொல்லவே மூன்று பாதம் அமைந்திருக்கிறதோ என்று சொல்லும்படி இருக்கிறது. இதில் ' ஸித்தம்ஸத்ஸம் ப்ரதாயே ' என்ற சுலோகத்தில் சொல்லப் பட்ட பதினன்கு குணங்களில் முதல் ஏழும் முதல் பாதத்தாலும், ' ஸமயநியதயாஸாது வ்ருத்யா ஸமேதம் ' என்றது இரண்டாவது பாதத்தாலும், பாக்கி ஆறும் மூன்ருவது பாதத்தாலும் ஸங்க்ரஹிக் கப்பட்டது என்று சொல்லலாம். எங்ஙனேயென்னில்—'ஸ்ரீமச்

சடாரியதி சேகரலப்தபோதம்' என்றதால் ஸத்ஸம் பிரதாயாகத ஸமீசீநஞ் ஞானத்வம் விவக்ஷிதமாகி ஸத்ஸம் பிரதாய ஸித்தவத்வ மும், 'ஸ்திரதியம்' என்றதால் சொல்லப்படுகிற ஸம்சய விபர்யயர ஹிதமானஞ்ஞானத்வத்வமும், ஸதாசார்ய ஸம்பந்தத்தாலேற்படு கிற அனகத்வமும் ச்ருதவேதாந்தத்வமும் சொல்லப்பட்டது. மேல் பதங்களினுல் சொல்லப்பட்ட விசேஷணங்கள் வேதாந்தசிரவண பலங்களானபடியால் ஸத்ஸம்ப்ரதாய க்ரம ஸமதிகதாசேஷவேத்ய ருக்கு வேதாந்தசிரவண பலங்கள் நியமேன ஸித்திக்குமாகையால் அவைகளும் சொல்லப்பட்டன. 'ஶ்ரீரங்கநாத யதிதுர்யக்ருபைக பாத்ரம்' 'ஸமய நியதயாஸாது வ்ருத்யா ஸமேதம்' என்பதைக் காட்டுகிறது இது. பரந்யாஸம் பண்ணிக் கொண்டது ஶ்ரீரங்கநாத யதிதுர்யருடைய அநுக்ரஹ விசேஷத்தாலேயே. மேல் மூன்ருவது பாதம் ஸ்வாமிக்குள்ள டம்பாஸூயாதிவர்ஜிதத்வம் முதலானவை கள் வ்யக்தமாகப் பிரகாசிக்கிற துரீயாச்ரமஸ்வீகாரத்தையும் ஸூசிப் பித்துமேலுள்ள விசேஷணங்களைக் குறிக்கிறது. டம்பா ஸூயாதி முக்தத்வமும், ஜிதவிஷயகணத்வமும் துரீயாச்ரம ஸ்வீகாரத்தாலேயேவ்யக்தமாகப் பிரகாசிக்கிறது. ஆஸ்தாந நிர் வாஹஸ்வீகாரத்தினுல் தீர்க்கபந்துத்வாதி நான்கு குணங்கள் சொல் லப்பட்டது. நம்மைப்போன்ற சிஷ்யவர்க்கங்களுக்கு இஷ்ட ப்ராபண நிஷ்ட நிவ்ருத்திகளை உபதேசித்து நல்வழிப்படுத்திதான் பண்ணின க்ருஷி பலித்தது என்று திருவுள்ள முகந்திருப்பதற் காகவன்ருே நிர்வாஹத்தையும் ஏற்றது.

'ச்ரோத்ரியம்' என்கிற வரையில் முதல் பாதத்தாலும், 'ப்ரஹ்ம நிஷ்டம்' என்பது முதல் நான்கு குணங்கள் இரண்டா வது பாதத்தாலும் ஸூசிப்பிக்கப்பட்டதாகவும் கொள்ளலாம். அப்போது 'ப்ரஹ்மநிஷ்டம்' என்பதால் உபாயாநுஷ்டாநம் விவக்ஷிதம் என்று சொல்லவேணும். மூன்ருவது பாதத்தால் ஸூசிப்பிக்கப்பட்ட ஆஸ்தான நிர்வாஹ ஸ்வீகாரத்தாலேபோல அந்த ஆஸ்தான நிர்வாஹத்தைத்தான் ஒப்புவித்த சரிதத்தாலும் மேற்கண்ட குணங்கள் இருந்தமை நன்கு காட்டப்பட்டிருக்கிறது.

இப்படியே நன்கு நாம் பராமர்சித்தால் ஆசார்யர்களுடைய குணுவிஷ்கரணம் பண்ணுகிற விசேஷணங்களாலும், அவர்

களுடைய சரித்திரத்தாலும், அநுஷ்டாநங்களாலும் ஒவ்வொரு குணமும் நமக்கு பிரகாசிதமாவதை நாம் வெளிப்படுத்தலாம். ஸ்வாமி ஸ்ரீதேசிகன் சில முக்கியமான குணங்களை திங்மாத்ரேண காட்டியருளினதை மட்டில் இப்போது இதில் அநுஸந்தித்தோம். மற்றும் இதற்கு உபகாரமாயும் இதனாலேற்படக்கூடியதாயுமுள்ள குணங்களையும் வ்யக்தமாக அநுஸந்திக்கலாம். 'தத்வஹிதே புமர்த்த இதி நஸ்த்ரேதா விபக்தம்' என்கிறபடி மூன்று விதமான தனத்தையுடைமை மூன்று பாதங்களால் அடைவே சொல்லப்படு கிறது. 'போதம்' என்பதில் தத்வஜ்ஞானத்தில் நிஷ்டையும், இரண்டாவது பாதத்தால் ஹிததமமான ப்ரணிபதனம் செய்தமை யும், மூன்றுவது பாதத்தால் ஓராகம் வள்ளுகிரால் பிளந்தானுறை மாகவைகுந்தத்தில் நாம் பெறவிருக்கும் ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தோசித கைங்கர்ய கர்த்ருத்வமும் இவ்விடத்திலேயே ஸூசிப்பிக்கப்படுகையால் 'புமர்த்தம்' பெற்றமையும் காட்டப் படுகிறது. இப்படிகேவலம் தயார்த்ரஹ்ருதயனாய் செய்தருளிய உபகாரவிசேஷங்களுக்கு மேற்படி அவதாரங்களை எப்போதும் போற்றி யுகப்பது 'குரோர் நாமஸதாஜபேத்' என்கிறபடி நமக்கு ஸ்வரஸ கர்த்தவ்யமாக ஏற்பட்டது. அதையே செய்து உஜ்ஜீவிப் போமாக." [ஸ்ரீ ரங்கநாத சடகோபமஹாதேசிகன் புகழ் மாலை. ஸ்ரீ அழகிய சிங்கரின் தனியன். † ஸ்ரீ 2. வே. தேவனார் விளாகம் வித்வாந் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார் ஸ்வாமி. பக்கங்கள் 39-42.]

"இவ்வரங்கர்பெருமான், மன்னர் கோவில் முதல் கூடலீரு கச் சிட்டருவக்கத் தனிக் கோனடாத்திக் கொண்டே நாற்றிசையும்

---

† இந்த மஹாநுபாவர் ஸ்ரீ அஹோபில மடத்தின் திவ்யாஸ் தாநத்தில் 43-ஆவது பட்டத்திற்காக நியமிக்கப்பெற்று ஸ்ரீமத் வேதமார்க்கேத்யாதி பிருதாலங்க்ருத ஸ்ரீ வண்சடகோப ஸ்ரீ வீரராகவ சடகோபயதீந்த்ரமஹா தேசிகன் என்ற திரு நாமத்துடன் விளங்கி வருகிறார் திருவெவ்வுளூரில். இவர் இதிற் கூறப்பெறும் நூற்றுண்டு விழாக்கொண்டாட்டத்திற்குரிய ஸ்ரீ அழகிய சிங்கரால் அநுக்ரஹிக்கப் பெற்றவர்.

சஞ்சரித்து வித்தகராய் விளங்கா நின்றார். அத்திறத்தனிக் கோனடாத்தற் கின்றியமையாவாகிய பேராண்மையும் இன்னருண் மையும், இவரிடத்துச் செவ்வனே பொருந்திப் பொலியா நின்றன. நல்லறங்காக்கும் பெருமையும், இன்னருள் சுரக்கும் எளிமையும் ஒருங்கிய பெருந்தகையாளராய்த் திகழாநின்றார். எத்துணைத் தண்ணியரையும், மாற்றாரையும், தமரென்றே அன்பார்ந்து கொள் ளும் தனி மாண்பரிவரேயாவர். "மித்ராமித்ரகதாகுத:" என்ற ப்ரஹ்லாதாழ்வானே இவருக்குவமை யாவனென்றது மிகையாகாது. தீமனம் அறவேமாய்த்து, உலகின்கண் அன்பே பூண்டு அருளே சுரக்கும் நீத்தாரனைவர்க்கும் இவரே உவமையாவர். பிறர் செய்த தீங்கனைத்துக்கும், அவர்கள் பண்டைய விச்சையும், சாத்விக வன்மையன்மையுமேஅடி, அவர்களென் செய்வார், சிங்கப்பிரானே அவரைத் திருத்திப் பணிகொள்வானுகை, என்று மனமார வாழ்த்தி ஆட்கொள்ளும் புண்ணியராய் ஓங்கி நின்றார். அறநெறி சிறிதும் வழுவாது ஒழுகும் தனித்தரும வீரராய்த் தாம் ஊன்றி நிற்கச் செய்தேயும், தம்மை அணுகினோர் நெறிகாவாமைக்குத் தாம் மனம் கரைவதல்லால் அவர்கள் மனம் நோவுபடுமாறு கடுஞ்சொல் யாதும் வழங்காப் பேராசிரியராவர். வழுப்பட்டாரும் வழிப்படு மாறே வாழ்த்தித் திகழாநிற்பர். "மைத்ரீ ஸமஸ்த பூதேஷு ப்ராஹ்மண ஸ்யோத்தமம் தநம்" என்று பராசரர்கண்ட மெய்ம்மை இவர் வடிவாயே விளங்கிற்றென்றதை நன்கே யாப்புறுத்துவாம். உலகுக்குற்ற குற்றங்களுக்கிக் கடியாது, உலகனைத்தும் பர னுடைமை யென்கிற ப்ரதாந ப்ரதிதந்த்ர ஸாக்ஷாத்காரமருளப் பெற்ற பெற்றியராயே பொலியா நிற்பர். எக்குடிப் பிறந்தோரும் சிங்கப்பிரான் விபூதிகளேயென்றும், அவர்கள் உடன்படாது விடி னும் அவன் அவர்களைவிடான் என்றும், காலங் கண்டும், வ்யாஜங் கொண்டும், திருத்திப் பணிகொள்வானென்றும், திருவுள்ளமுருகி நிற்பர். காலநிலையும், உலகியலும் நோக்கித் தத்தம்மியலாமையே தேறி மனம் கரைவதே அரிய தருமமென்றும், கள்ளா வறமென் றும், மாரிமுழக்கம் செய்வர். யாம் கடவுளேயனைய மென்னும் களவுடை மனத்தராகாது, உள்ளவாறே நந்நிலையோர்ந்து, அண்ணல் பொன்னடிபால் சென்றிறைஞ்சி, நங்கீழ்மையையும், தீமையையும், உள்ளவாறே விண்ணப்பம் செய்துகொள்வதே

நமக்கு உரிய கடன் என்றும், யாமே பெரியோம் என்று மயங்கி, சூது பயின்று, பிறரையும் நம்போலியராக்கா திருத்தலே நல்லற மாகுமென்றும், ஆர்வத்தால் நல்லுரையருளா நிற்பர். இவ்வாறு நல்லன்பின் வடிவாயே நாடோறும் வளரா நின்ற இந்நல்லாசிரிய ரமுதத் திருமொழிகளைச் செவிகளாரப் பருகியுள்ளோம்.

ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் வைபவத்தையும், குருபரம்பராப்ரபா வத்தையும், ஸ்ரீதத்த்வத்தையும், ஸ்ரீ ந்ருஸிம்ஹ தத்த்வத்தையும், ப்ரபஞ்சத்துக்கும் பரனுக்குமுற்ற சரீராத்ம ஸம்பந்த ஸத்யத்தை யும், தத்த்வஹித புருஷார்த்தங்கள், சரீரி சரண சரண்யதயா நிலை யுற்றதையும், அவைகளின் பான்மையையும் நீர்மையையும், மறைச்சான்று பல ஓதி, சிங்கவேள் குன்றத்தான் திருவுருவைச் சுட்டி, எம்போலிய ரிதயத்துக்கு மிலக்காகுமாறு விளக்கி யருளுவர்.

"வந்தானென் றீண்டிய சங்கமெடுத்தூத வேண்டிய வேதங் களோத" அக்காலத்து மதுரைமா நகரில் சாரீரக சாஸ்த்ர ப்ரதி பாத்யனை வன்னுதைப்புள்ளுயர்த்த பரஞ்சுடரின் விஜயத்வஜ மாயே பெரியாழ்வார் விளங்கியதுபோல், இக்காலத்து, அந்நகரிற் றனே இந்நாதரும் இவ்வண்ணமே சாலத் திகழ்ந்த திருக்கதையை இங்கண் சிறிது குறிப்பிடா நின்றோம். விரிப்பிற் பெருகும்." [ஸ்ரீ ரங்கநாத சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் புகழ் மாலை. ஸ்ரீ அழகிய சிங்கர் வைபவம். இராமநாதபுரம் ஸ்ரீ உ. வே. கேசவய்யங்கார் ஸ்வாமி. பக்கங்கள் 55-60. 29-1-1938.]

"தேசிகம்பூஷ்ணுரீப்ஸேத்," "ஆசார்யஸ்ஸத் பிரப்ரத்யுப கரணதியாதேவவத் ஸ்யாது பாஸ்ய:" என்றிவ் வழிகளில் "தூப்புற் குலமணியாம்" "வேதியர் குலத்தரசு" கட்டளை யிட்டிருக்கிறார். இக்கட்டளையை இவ்வழகியசிங்கர் தம் செய்கையில் நன்கு நிறை வேற்றி வைத்திருக்கிறார். அத்துடன் ஸ்ரீஸத்ஸம்ப்ரதாய ப்ரகாச: என்னும் தமது நூலில் அதைப் பிறருக்கும் இனிது உபதேசித் திருக்கிறார். ஸதாசார்ய பக்தியுள்ளவர்களிடத்தில் பகவானுக்கே

மிகுந்த ப்ரீதியுண்டு என்பதற்கு எவ்வளவோ இதிஹாஸங்களுண்டு. இவ்வாசார்ய பக்தியைத் தமக்குள் தாம் வளர்த்ததுமில்லாமல் நம்மிடத்திலும் அதை வளர்த்த ஸ்ரீ அழகிய சிங்கர் போன்ற மஹான்களின் பெருமை மிகவும் உயர்ந்ததே.'' [ஷெமாலே. குருச்சி ஸ்ரீ உ. வே. ஸ்ரீநிவாஸ வேதாந்தாசார்ய ஸ்வாமி, எம். ஏ. எல். எல். பி. ஸ்ரீ அழகிய சிங்கரின் ஆசார்ய பக்தியும் ஸமரஸமும். பக்கங்கள் 61–64. 29-1-1938.]

''யாரையும் வசீகரிக்கும்படியான திவ்ய திருமேனியும், ஹார்த்தமானதும், இனிமையானதும், கோபலேசமில்லாததுமான திருவாக்குகளும், சிஷ்யர்களின் உஜ்ஜீவனமே தம்முடைய மனோரதமாகக் கொண்ட திவ்ய ஸங்கல்பமும், க்யாதி, லாப, பூஜை முதலியவைகளில் ஈஷத்துக்கூட எண்ணமலிருந்ததும், பூர்வாசார்யர்களினுடையவும், ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடையவும் திருவுள்ளம் உகக்கும்படி செய்ததான கார்யங்களும், வேண்டியவன், அயலான் என்று இல்லாமல் எல்லாரும் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் விபூதிகள் என்கிற ஸமதிருஷ்டியுடன்கூடிய பார்வையும், ஸ்ரீ அழகியசிங்கரிடத்தில் குடிகொண்டிருந்தன. ஆஸ்தானத்திற்கு எழுந்தருளியதற்கு முன் இருந்த சில சிஷ்யகோடிகளுக்குள் உண்டான வைமனஸ்யங்கள் தீயினில் தூசுபோல ஸ்ரீ அழகிய சிங்கர் ஆஸ்தானத்திற்கு எழுந்தருளினதும் ஆயின. ஸ்ரீ அழகிய சிங்கர் ஆஸ்தானத்தில் எழுந்தருளியிருந்தகாலத்தில் சிஷ்யகோடிகளுக்குள் ஒருவருக்கொருவர் வைமனஸ்யமே கிடையாது என்று சொல்வது அதிசயோக்தி ஆகமாட்டாது.

மூன்று ஆவ்ருத்தி இந்த மஹானுபாவர் திரு அஹோபிலத்திற்கு ஏளினதையும், அந்தஸமயத்தில் எல்லாரும் ஆச்சர்யப்படும்படியாக திருப்ரதிஷ்டையை அங்கு செய்து வைத்ததையும், காலக்ஷேபங்கள் குறைவற நடத்தினதையும், அதிலும் நம்முடைய ஸித்தாந்தத்திற்கு அஸாதாரணமாக ஏற்பட்ட ஈடு முப்பத்தாருயிரப்படியை ஸ்ரீ உ. வே. தில்லையம்பூர் வித்வாந் சக்கரவர்த்தி யாசார் ஸ்வாமி, முதலியவர்களுக்கு காலக்ஷேபம்

சாதித்து, சாற்றுமுறை செய்ததையும், ஸ்ரீ பாஷ்யார்த்த மணி ப்ரவாள தீபிகை, ஸ்ரீ பாஷ்யதூஷணபரிஹாரம், ஸ்ரீ ஸத்ஸம்ப்ரதாய பிரகாசிகை முதலிய கிரந்தங்களை, சிஷ்யர்களின் க்ஷேமத்தை உத்தேசித்து அநுக்ரஹித்ததையும், ஆங்காங்குள்ள ஸ்ரீ ஸந்நிதிக்கு ஸொந்தமான மடங்களை ஜீர்ணோத்தாரணம் செய்ததையும், மடம் இல்லாத இடங்களில் புதிதாக மடத்தைக் கட்டினதையும், திருக்குடந்தையில் ஒரு ஸம்ஸ்க்ருத பாடசாலையை ஸ்ரீ மடத்தில் ஸ்தாபித்ததையும், ஆங்காங்கு ப்ருந்தாவநங்களில் ப்ரதிஷ்டை செய்ததையும், ஸ்ரீ ந்ருஸிம்ஹன் திருவுள்ளம் உகக்கும்படி இம் மஹாந் செய்துவந்த திருவாராதனவைகரீகளையும் பார்த்த மஹான்கள், இவரை ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய அபிநவாவதார மென்றும், சிலர் நம்மாழ்வார்தான் இப்படி அவதாரம் செய்தாரோ என்றும், மற்றும் சிலர் ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் என்றும், மற்றுமுள்ளவர்கள் ஸ்ரீ மதாதிவண் சடகோப யதீந்த்ர மஹா தேசிகர் என்றும் ஸாதித்தார்கள். ஆனல் வாஸ்தவமாய் ஆராய்ந்து பார்க்குங்கால் இவர் எல்லாரும் சேர்ந்த ஒரே அவதாரமென்று சொல்வது மிகவும் பொருந்தினதாகும்.'' [ஷை புகழ்மாலே. ராவ்ஸாஹிப் கமலாபுரம் ஆர். ராமஸ்வாமி அய்யங்கார். விஞ்ஞாபனம். பக்கங்கள் vi–viii. 29–1–1938.]

'' ஆகையால் ஸகலவித கஷ்டங்களிலிருந்தும் விடுபட்டு பரம பதத்தை அடைந்து நித்தியமான ஆனந்தத்தை அநுபவிப்பதற்காகவே இந்த மனுஷ்ய ஜந்மத்தை நாம் அடைந்து இருக்கிறபடியால் இப்பொழுது லோகரக்ஷணார்த்தமாக ஸஞ்சரித்துக் கொண்டிருக்கிற ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனை ஆச்ரயித்தால் ஸகலவித புருஷார்த்தங்களையும் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் நமக்குக் கொடுத்து அநுக்ரஹம் செய்வார். அதிதுர்லபமான மனுஷ்ய ஜந்மத்தை வீணுக்காமல் சீக்கிரமாக பகவானை ஆச்ரயித்து எல்லோரும் ஐஹிகமாகவும் ஆமுஷ்மிகமாகவும் உள்ள ஸகலவித ஆனந்தங்களையும் அனுபவித்துக்கொண்டு நித்யம் ஸந்துஷ்டர்களாக இருக்கவேண்டும் என்று ஸ்ரீ அழகியசிங்கர் அதிவிஸ்தாரமாக உபன்யாசம் செய்தருளினபடி.'' [ஷை புகழ்மாலே. ஸ்ரீ அழகிய

சிங்கரும் ஸ்ரீமத் ராமாயணஸாரமும். ஸ்ரீ உ. வே. முக்கூர் வித்வாந் ஸ்ரீ ராஜகோபாலாசார் ஸ்வாமி.]

" அஞ்ஞானம் போக்கி யருளெஞ் சடகோப
மெய்ஞ்ஞான யோகி விரைமலர்த்தாள்—எஞ்ஞான்றும்
சிந்திப்பார்க் குண்டாம் திருமா லருள்சென்று
வந்திப்பார்க் கின்றும் மயல்."

[மதுரைத் தமிழ்ச் சங்கக் கலாசாலை தலைமை உபாத்தியாயரும், செந்தமிழ்ப் பத்திராதிபருமான திரு. நாராயணையங்கார் ஸ்வாமி ஸ்ரீ அழகிய சிங்கர் மதுரைக்கு எழுந்தருளியிருந்த போது துந்துபி வருஷம் மார்கழி மாசம் 16உ அட்வொகேட் டி. ஸி. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி திருமாளிகையில் ஸ்ரீ கண்ண பிரானை எழுந்தருளச் செய்து டோளோத்ஸவம் கண்டருளப் பண்ணிய ஸமயத்தில் பாடியது.]

இவ்வழகிய சிங்கரது பாரமார்த்திகஞ்ஞாநம், அனுஷ்டாநங்கள் அபாரமானவை ; ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனே ஸகலமும் என்றிருந்த ஸம்பந்நர் ; ஆழ்வார்களிடத்தும் அவர்கள் அருளிச் செயல்களிடத்தும் ஆராத அன்புடையவர் ; சம்பிரதாயத்தை நாடெங்கும் நன்கு தழைத்தோங்கச் செய்தவர் ; அகில அண்ட சராசரங்களும் அரிமுகனின் உடைமை என்று அறிந்து அநுபவித்தவர் ; அவரை ஒருக்கால் ஸேவிக்கும் பாக்கியம் பெற்றவர் அரும்பேறு அடைந்தவரே ; வடிவழகும் அருள்நோக்கும் இன்சொல்லும் ஆதரிப்பும் அனைவரையும் அகமகிழச் செய்யும் தன்மையன. எல்லோரும் அவருக்கு வேண்டியவரே. கேளாரும் வேட்ப மொழியும் சொல் வன்மையுடைய செம்மல் அவர். அரியே பரன் என்று அன்று அவனியுள்ளார் அறியுமாறு விட்டுசித்தன் திருமாலின் கிருபையால் நிர்ணயித்த நான்மாடக்கூடலான தென்மதுரையம் பதியில் பல மதத்தினரும் அன்புடன் அமைந்து கேட்குமாறு பல அரிய உபந்நியாஸங்கள் செய்தருளிச் சென்றவிடமெல்லாம் சிறப்பெய்தி விளங்கினர். தென்னாட்டவர் வடநாட்டவர் முதலான

அனைவரும் அவ்வண்ணலிடம் ஈடுபட்டு கிருதார்த்தராயினர். ஓங்கி வளர்க அந்நம்பியின் சீர்த்தி.

மார்கழி மாதம் மகிதலம் வந்து மாண்புமிக்கு விளங்கிய அம்மஹாநுபாவரின் **நூற்றாண்டு மலராக இம் மார்கழிமாலை** மிளிர்வதே இதன் தனிச்சிறப்பு.

ஈரெட்டாண்டுகளாக நற்றொண்டாற்றி வரும் இத்தமிழ்ச் சங்கத்துப் பேரபிமானியும், செந்தண்மை பூண்டொழுகும் திருமாலடியராகிய அந்தணர் பலர்வதியும் பூமகட்கணிகலமாய்த் திகழும் பூண்டி என்ற அக்ரஹார வாசியும், கற்பினுக்கணியாய் விளங்கும் **தங்கம்மாள்** என்ற அலர்மேல் மங்கையை அன்னையாகப் பெற்றவரும், எமது பாரத்வாஜகோத்திரத் துதித்த வேதியர் திலகமான **அச்சுத திருவேங்கடாசாரியார் ஸ்வாமியைத்** திருத்தந்தையாராகப் பெற்றவரும், நற்குணங்கள் மிகுந்துள்ள **ஜயலக்ஷ்மி அம்மாளை** வாழ்க்கைத் துணையாகவடைந்தவரும், நல்லார்கட்கு நல்லணியாய் விளங்கி வரும் நன்மையோனும், நற்குண நிதியாய்த் திகழ்பவரும், திருவயிந்தைமாநகரின்கணுள்ள நம் நிகமாந்த மஹாதேசிகன் திருமாளிகையில் இன்னொளி விளக்கு என்றும் பிரகாசிக்குமாறு பேருதவி செய்த பெருந்தகையாளரும், ஒரு கால்நூற்றாண்டாக திருச்சானூரில் ஆண்டுதோறும் நடைபெற்றுவரும் மஹோத்ஸவத்தில் யானை வாஹன உத்ஸவத்தை அன்புடன் நடத்தி வருபவரும், பகவத் பாகவத ஆசார்ய பக்திக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்து நிற்பவரும், சம்பிரதாயாபிவிருத்தியில் விசேட நன்னோக்கு உடையவரும், பரோபகாரத்துக்கே இட்டுப் பிறந்த பரம பவித்திரரும், தனக்கென வாழாத் தகைமையாளரும், உலகெலாமுவந்து போற்றும் பெற்றியராயுள்ளவரும், சிறந்த தேசிக பக்தராய்ச் சிறப்புடன் விளங்கிவருபவரும் ஆகிய **ஸ்ரீமான் பூண்டி அச்சுத கோபாலாசாரியார் அவர்களே** இத்தனிச்சங்க வெளியீடாகிய நூற்றாண்டுமலருக்குப் பூரண உதவி புரிந்த புண்ணியர். அச்சீரிய வள்ளலாரும் அவரது உற்றார் உறவினர் அனைவரும் எங்குமுள்ள திரு நரசிங்கப் பெருமானின் பூரணவருள் பெற்று இன்புறுவாராக.

இந்நற்குண நற்செல்வனைக் கையிற்கனியெனக் கார்த்திகை யிற் காட்டித்தந்த "திருச்சின்னமாலை" வள்ளலார் ஸ்ரீமான் துரைசாமி அய்யங்கார் அவர்கட்கு எமது நன்றி என்றும் உரித்தாகுக.

"மங்கல நங்குல நாயகனு மறை மாறனிலங்குபதச்
சிங்கனிணங்கிய கோவில மன்னிய சீர்மையினற் பெனவே
சங்கமுழங்குல கெங்குமெழும் புகழ்ச் செவ்விய சிந்தையுயர்
நங்களரங்க பதிச்சட கோபர் நலத்திரு வேத்தினமே."

பொங்கும் மங்கலம்

எங்கும் தங்குக.

ஸ்ரீரங்கவிலாசம்,
அம்பத்தூர்,
25-12-1951.

ப. ரெ. திருமலை அய்யங்கார்,
காரியதரிசி.

ஸ்ரீ:

மார்கழித்திங்கள்.

[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரெ. திருமலே அய்யங்கார், தமிழ் வித்துவான், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம்.]

காலம் அனுதி, நித்யம். தினம், பக்ஷம், மாஸம், வருஷம், யுகம் என்பன கால அளவைகள். ஒரு பகலும் ஒரு இரவும் சேர்ந்தது ஒருநாள். இது மநுஷ்யமானம். முப்பது நாட் கொண்ட மாஸம் பனிரெண்டு ஒரு வருஷம். அதில் அயனம் இரண்டு. அவையாவன உத்தராயணம், தக்ஷிணுயணம் என்பன. தை மாதம் முதல் ஆனி மாதம் இறுதியாக உத்தராயணம். ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் முடிய தக்ஷிணுயணம். நம்முடைய ஓர் அயனம் தேவதைகளுக்குப் பகல் அல்லது இரவு. உத்த ராயணம் பகல். தக்ஷிணுயணம் இரவு. நாளுக்கு ப்ராஹ்ம முகூர்த்தம் போலே ஸம்வத்ஸரத்துக்கு மார்கழி மாஸம். மாஸத் திற்குத் தனித் தமிழ்ப்பதம் திங்கள். திங்கள் என்பது சந்திரன். சந்திரன் பூமியை ஒரு முறை சுற்றிவர எடுக்குங் காலத்தையிட்டு அக்கால அளவை மாதம் என்கிறபடியால் அதற்குத் தமிழில் 'திங்கள்' என்ருர்கள். அமாவாசைக்கு அமாவாசை ஒரு மாதம் எனக்கொண்டு சந்திர சம்பந்தத்தாற் காலத்தை வரையறுக்கும் சாந்திரமாநரீதி பற்றி 'திங்கள்' என்று மாதத்திற்குப் பெயர் வழங்கலாயிற்று; இலக்கணே. 'மார்க்கசீர்ஷம்' என்னும் வட சொற் சிதைவு 'மார்கழி'. எனவே, மார்கழித் திங்கள் என்பது மார்கழி மாதம்.

உலகம் போற்றுந் தமிழில் காலங்களைப் 'பெரும்பொழுது' என்றும், 'சிறுபொழுது' என்றும், பிரிப்பர். ஆண்டினை ஆறு பிரிவாக்கி, ஒவ்வொரு பிரிவையும் ஒவ்வொரு 'பெரும்பொழுது' என்பர். நாளினை ஆறு பிரிவாக்கி ஒவ்வொரு பிரிவையும்

ஒவ்வொரு 'சிறுபொழுது' என்பர். கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் எனப்படுபவை பெரும் பொழுதுகள். இவற்றுள் ஒவ்வொன்றும் இரண்டிரண்டு மாதக் கணக்கையுடையது. எனவே, மார்கழி, தை மாதங்களின் காலம் முன்பனிக்காலம் ஆகும்.

சாயுங்காலத்திலிருந்து நள்ளிரவு வரையில் பனிதுளிக்கின்ற பருவம் 'முன் பனிக்காலம்' எனப்பெறும். மார்கழித் திங்களில் இரவின் முற்பகுதியில் பனி மிகுகின்றதை நாம் இன்றும் கண்ணுரக் காண்கின்ருேம். இரவு பத்து மணிக்குப் பார்த்தால் புகை சூழ்ந்திருக்கிறது போல் ஒரு தோற்றங் காணப்படும். புள்ளி புள்ளியாகச் சிறு பனித்திவலைகள் விழுந்து பூக்களை நிரப்பிக் கொண்டிருக்கிற காட்சியை இக்காலத்தே பார்க்கலாம். அதிகாலையில் எழுந்து சென்று நோக்கினல் சில இலைகளின் ஓரத்தே இரண்டு பக்கங்களிலும் வெள்ளிய முத்துக்கள் அடுக்கி வைத்தாற் போன்றுள்ள அழகிய காட்சியை எவரும் கண்டு மகிழலாம். இத்தனுர் மாதத்தே கருவிளையும் கரும்பும் பூக்கின்றன; பிடவும் பகன்றையும் பிணிவிடுகின்றன; தோன்றியும் கோடலும் பூத்துத் தோன்றுகின்றன; பயறும் உழுந்தும் பழுத்துக் காயைச் சிந்துகின்றன. இத்திங்களில் குளிரினல் மக்கள் நடுங்குவதும், போர்வையை நாடுதலும், நெருப்பின் பக்கத்தே இருக்க விரும்புதலும் இயல்பு. காலையில் எழுந்த உடனும் மக்கட்கு வெப்பத்தில் விருப்பம் இருக்கக் காண்கிருேம். காலைக் கதிரவன் முன்னே நிற்கவும் இருக்கவும் அவர்கள் ஆசைப்படுவர். நண்பகல் நேரத்தில்கூட வெயிலில் விருப்பம் இருக்கும். அதற்குக் காரணம் இம்மாதத்திலே சூரியன் நம்மைச் சுடுவதில்லை என்பது. வெயிலிலும் வெப்பத்திலும் இத்திங்களில் விருப்பமுள்ள மக்கட்கு வெந்நீரிலும் விழைவு ஏற்படுதல் இயல்பே. மேலும் மார்கழித் திங்களில் மக்களுக்குக் காரம் பொருந்திய இஞ்சியிலும், பொரி, அவல் முதலியவற்றிலும் விருப்பம் நிரம்ப உண்டு. இவற்றைத் தின்று குளிர்ச்சி பொருந்திய சண்பக மலரை வெறுத்து மல்லிகை மாலையை மகளிர் சூடுவர். பண்டைக்காலத்தில் மார்கழி தை மாதங்களில் விடியற் காலவேளையில் நீராடுதல் பெருவழக்கிற்ருக

இருந்தது. இப்பொழுதும் மார்கழித் திங்களில் விடியுமுன் பல மக்கள் நீராடிக் கோயிற் சென்று வழிபடுகின்றனர்.

இதுகாறும் கூறியவற்றால், இத்திங்களிலே தோன்றும் பனித் திவலைகள், மலரும் பூக்கள், பழுக்குங் காய்கள், மக்களுக்கு உண்டாகும் மெய்ப்பாடுகள், அவர் உண்ண உடுக்கப் பருக விழையும் பொருள்கள், நீராடல்கள் முதலியன இன்னபடி என்றதை நன்கு அறியலாம்.

இனி, இயற்கை எழிலைக்கண்டு மகிழ்ந்து வாழ்ந்த பண்டைத் தமிழ்ப் புலவர்கள் பழந்தமிழ் இலக்கியங்களில் கூறியுள்ள செய்தி களிற் சிலவற்றைக் காட்டுவாம்.

சிறு திவலைகள் முன்பனிக்காலத்திலே பொழியப்படும் என்பது காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனாரால் "முல்லைப்பாட்டில்" பேசப்பெற்றுள்ளது. அப் பகுதி ஈண்டுக்காண்க.

* * * * வலனேர்பு
வயிரும் வளையு மார்ப்ப வயிர
செறியிலைக் காயா வஞ்சன மலர
முறியிணர்க் கொன்றை நன்பொன் காலக்
கோடற் குவிமுகை யங்கை யவிழத்
தோடார் தோன்றி குருதி பூப்பக்
கான நந்திய செந்நிலப் பெருவழி
வானம் வாய்த்த வாங்குகதிர் வரகிற்
றிரிமருப் பிரலையொடு மடமா னுகள
வெதிர் செல் வெண்மழை பொழியுந் திங்களின்
—(முல்லைப்பாட்டு.

[வெற்றி தோன்றிக் கொம்பும் சங்கும் முழங்க, நுண் மண லிடத்தனவாகிய நெருங்கின இலையினையுடைய காயா அஞ்சனம் போல அவிழ, தளிரினையும் கொத்தினையுமுடைய கொன்றை நன்றாகிய பொன்னைச் சொரிய, கோடலினது குவிந்தமுகைகள்

அகங்கை போல விரிய, திரட்சி நிறைந்த தோன்றி உதிரம் போலப் பூப்ப, காடு தழைத்த சிவந்த நிலத்திற் பெருவழியிலே மழை வேண்டப்பெய்த வரகு எதிர்காலத்துக்குப் பெய்யச் செல்கின்ற வெள்ளிய மழை சிறு துவலேயைப் பொழியும் முன்பனி தொடங்குந்திங்களிலே வளேகின்ற கதிரையுடைய வரகிடத்தே முறுக்கொண்ட கொம்பினேயுடைய புல்வாய்க்கலேயோடே மடப்பத்தையுடைய மான்துள்ள.]

மார்கழித்திங்களில் இயற்கை எழிலேக்கண்டு எவ்வாறுபகர்ந்துள்ளார் நப்பூதனுர் என்பது கூருமலே விளங்கும்.

ஆசிரியர் நல்லந்துவனுர் பாடிய பரிபாடற் பாட்டொன்றில் " மார்கழி மாதத்தைப் " பற்றிப் பேசுகின்ருர்.

" கார்வானம் அதிர்குரல் நீங்கப் பனி மிகுதலாற் குளிரால் நடுங்குதலேயுடைய முன்பனிப்பருவத்தில் ஞாயிறு தெருத கடைமாரியை யுடைய மார்கழி மாதத்தில் திருவாதிரை நட்சத்திரத்தில் ஆகமங்களே உணர்ந்த பூசகர் அத்திருவாதிரைக்குத் தெய்வமாகிய சிவபிரானுக்குரிய விழாவைச் செய்யத் தொடங்கினர் ; அந்தணர் பொற்கலத்தை யேந்தினர் ; உலகம் மழையாற் குளிர்வதாக வென்று அம்பாவாடலேச் செய்யும் கன்னியர், முதுபார்ப்பனிமார் நோன்பு செய்யும் முறைமையைக் காட்டப்பனியையுடைய விடியற் காலத்தே நீராடினர் ; அங்ஙனம் அடியபின்னர் குளிர் வாடை வீசுவதால் அம்மகளிர் கரையில் அந்தணர் வேத மந்திரங்களால் வளர்த்த அக்கினியின் அருகிற்சென்று தம் ஈர ஆடைகளே உலர்த்தினர். அவ்வந்தணர் அந்த அக்கினியினிடம் அளிக்கும் அவியானது வையையே! நினக்கு வாய்த்ததாக இருந்தது " என்ற பொருளுள்ள,

கனேக்கு மதிர்குரல் கார்வான நீங்கப்
பனிப்படு பைதல் விதலேப் பருவத்து
ஞாயிறு காயா நளிமாறிப் பிற்குளத்து
மாயிருந் திங்கண் மறுநிறை யாதிரை
விரிநூ லந்தணர் விழவு தொடங்கப்
புரிநூ லந்தணர் பொலங்கல் மேற்ப

வெம்பா தாக வியனில வரைப்பென
அம்பா வாடலி ஞய் தொடிக் கன்னியர்
முனித்துறை முதல்வியர் முறைமை காட்டப்
பனிப்புலர் பாடிப் பருமண லருவியின்
ஊதை யூர்தர வுறை சிறை வேதியர்
நெறி நிமிர் நுடங்கழல் பேணிய சிறப்பிற்
றையன் மகளி ரீரணி புலர்த்தர
வையை நினக்கு மடை வாய்த் தன்று''

—(பரிபாடல் 11)

என்ற அடிகளை நோக்குக.

கடியலூர் உருத்திரங்கண்ணனார் 'பனி தவழ்வதுபோல வெள்ளை ஆடை அசைந்தது' என்கின்றார்தாம் பாடிய பெரும்பாணாற்றுப் படையில்,

அப்பகுதி வருமாறு :—

* * கொடும்பூண் மகளிர்
கொன்றை மென்சினைப் பனிதவழ் பவைபோற்
பைங்கா ழல்கு னுண்டுகி னுடங்க
மால்வரைச் சிலம்பின் மகிழ்சிறந் தாலும்
பீலி மஞ்ஞையி னியலிக் கால
தமனியப் பொற்சிலம் பொலிப்ப வுயர்நிலை
வான்றோய் மாடத்து வரிப்பந் தசைஇக்
கைபுனை குறுந்தொடி தத்தப் பைபய
முத்த வார்மணற் பொற்கழங் காடும்.

[உயர்ந்த நிலைமையையுடைய தேவருலகத்தைத் தீண்டும் மாடத்து உறையும் வளைந்த பேரணி கலங்களையுடைய மகளிர், கொன்றையிடத்து அரும்புகளையுடைய மெல்லிய கொம்புகளிலே பனி மாசு கிடந்து தவழ்கின்றவைபோலப் பசிய மணிகள் கோத்த வடங்களையுடைய அல்குலிற் கிடக்கின்ற மெல்லியதுகில் அசைய, பெருமையையுடைய பக்க மலையிலே மனவெழுச்சிமிக்கு ஆர வாரிக்கும் தோகையையுடைய மயில்போல உலாவி, பொற் பூண்

களையுடைய கால்களிடத்தனவாகிய பொன்னுற் செய்த சிலம்புகள் ஆரவாரிப்ப நூலால் வரிதலையுடைய பந்தையடித்து இளைத்து, முத்தையொத்த வார்ந்த மணலிலே மெத்தென மெத்தெனக்கையிற் புனைந்த குறுந் தொடியசையப் பொன்னுற் செய்த கழலைக் கொண்டு விளையாடும். இது வணிகரிருப்பைக் கூறிற்று.]

வணிகர் குலத்து மகளிர் சிலர் மயிலைப் போல இயலிச் சிலம்புகள் ஒலிக்கும்படி மாடத்தின் மீது நூற்பந்தாடுகின்ற செய்தியைக் கூறுகின்ற இடத்திலே 'பனிதவழ்பவை போல் நுண்டுகில் நுடங்க' எனச் செப்பினுர். அம்மங்கையர் பசிய நன்மணிகள் கோத்த வடங்களைத் தரித்த இடையினை உடையர். அவ்விடைகளில் மெல்லிய ஆடையை அவர்கள் உடுத்து உள்ள னர். பந்தாடும் பொழுது அவ் ஆடை அசைவது பனிதவழ்வது போல் உள்ளது என்றும், அவர்களுடைய அரை கொன்றை மரத்தின் கொம்பு போல உள்ளன என்றும் அப்புலவர் பெருந்தகை கருதி மேற் குறித்தவாறு கூறினுர் என்க.

இளங்கோவடிகள், தாம் இயற்றிய சிலப்பதிகாரம் எனும் நூலின் கண்ணே ஒரு அரிய செய்தியைக் குறிப்பிட்டுள்ளார். அதாவது, மகளிரும் மைந்தரும் வளமனையில் இளநிலாவைத் துய்க்க அமைத்திருந்த முற்றங்களில் இளவெயிலை நுகரும்படி விரிந்த கதிரையுடைய ஆதித்த மண்டிலம் மிதுன வீதியிலே எழுந்து இயங்குதலானே, வெண்முகில் அரிதாகத் தோன்றும் முன் பனிக்காலம் என்பது.

வளமனை மகளிரு மைந்தரும் விரும்பி
இளநிலா முன்றிலி னிளவெயி னுகர
விரிகதிர் மண்டிலந் தெற்கேர்பு வெண்மழை
அரிதிற் றேன்று மச்சிரக் காலை.

—(சிலப்பதிகாரம் மதுரைக். ஊர்காண்காதை.)

[இளநிலா - மாலைப் பொழுதின் நிலா; மண்டிலம் - ஆதித்தன்; நுகர்தல் - பயன்கோடல்; ஏர்பு - எழுதலான்; வெண்மழை -

வெள்ளை மேகம், பனிமாசுமாம்; அரிதிற்றேன்றும் அச்சிரக்காலை-அரிதாகத் தோன்றும் முன் பனிக்காலம்.]

இப்பருவத்தே நண்பகல் நேரத்தில் கூட மக்களுக்கு வெயிலில் விருப்பம் இருப்பதைக் காண்கலாம். சூரியன் சுடாமலிருப்பதே அதற்குக் காரணம். இது பற்றியே முன்னர் விவரித்த பரிபாடலில் இப்பருவம் 'ஞாயிறு காயாப் பருவம்' எனக்கூறப் பெற்றுளது.

சேரமன்னனைக் கடும்பனியிற் காணச் சென்ற ஒருத்தியின் கையே போர்வையாக நின்றதுவோ என்றவாறு ஒரு புலவர் பாடியுள்ளார். கம்பளிப் போர்வை, துணிப்போர்வை ஒன்றும் இல்லாதவர் தத்தம் கையையே போர்வையென நினைத்துக் கொண்டு கட்டிக் கொள்ளுதல் இயல்புதானே. அச்செய்யுள் ஈதே.

> கடும்பனித் திங்கட்டன் கைபோர்வை யாக
> நெடுங்கடை நின்றதுகொல் தோழி—நெடுஞ்சினவேல்
> ஆய்மணிப் பைம்பூண் அலங்குதார்க் கோதையைக்
> காணிய சென்ற வென்னெஞ்சு.
>
> —(முத்தொள்ளாயிரம்.)

தலைவன் பிரிந்திருக்கிறான். அவன் திரும்பி வருவதாகச் சொல்லிச் சென்ற முன் பனிக்காலம் வந்து விடுகிறது. அவன் விரைவில் வந்து விடுவான் என்று தோழி தலைவிக்கு வற்புறுத்திக் கூறுகிறாள். அதற்குத் தலைவி குறிப்பாக பதில் உரைக்கின்றாள். "தோழி! மலைப் பக்கத்திலேயுள்ள தினைப்புனத்திலே குறவனுடைய சிறிய தினையை அரிந்த மறு காலிடத்தில் அவரைக் கொடி பூப்பதாகிய முன் பனிக்காலத்தில் வராத என் கணவர் முன்னெல்லாம் அழுத கண்ணீர் துடைத்தவர். இப்பொழுது வரக் காணேனே எத்தன்மையை உடையராயினரோ?" என்பதே அவள் பதில். பிரிந்து சென்ற கணவன் முன்பு மனைவியிடத்தில் இன்பம் பெற்ற வாறே மீண்டும் இன்பம் பெறத்தக்கவன் என்பதும், ஏதோ ஒரு செயலைச் செய்து முடிக்கும் பொருட்டும் பிரிந்து சென்றுள்ள அவன் அச்செயலை முற்றுவித்ததாற் பெறும் இன்பத்

தோடு மனைவி மாட்டுப் பெறும் இன்பத்தையும் எய்தற் பாலன் என்பதும் குறிப்பால் அறியப்படுவன. இவற்றை கடுவன் மள்ளனார்.

யாரா குவர்கொல் தோழி ! சாரற்
பெரும்புனக் குறவன் சிறுதினை மறுகால்
கொழுங்கொடி யவரை பூக்கும்
அரும்பனி யச்சிரம் வாரா தாரே.

—(குறுந்தொகை)

எனப்பாடியுள்ளார். அவரை பூக்கும் அரும்பனி அச்சிரக்காலத்தை அழகிதாகக் குறிப்புப்பொருள் அமைத்துப் பாடியுள்ள அவ் அருந்தமிழ் நூற்புலவர்க்கு யாது கைம்மாறு உளது ?

மார்கழித்திங்களில், நடுக்கத்தைச் செய்யுங்காலமாதலால் மக்கள் எலியின் உரோமத்தால் ஆகிய போர்வையை விரும்பிப் போர்த்திக்கொண்டனர் என்று திருத்தக்க தேவர் எனும் செந்தமிழ்ப் பாவாணர்,

கொங்கு விம்முபூங் கோதை மாதரார்
பங்க யப்பகை ப்பருவம் வந்தென
எங்கு மில்லன எலிமயிர்த் தொழிற்
பொங்கு பூம்புகைப் போர்வை மேயினர்.

என்று கூறியுள்ளார். மேலும் இக்காலத்தே மக்கள் இஞ்சி, பொரி முதலியவற்றில் விருப்பம் உடையராய் அவற்றைப்புசித்து மல்லிகை மாலையை மகளிர் சூடினர்கள் என்பது

அளிந்த தீம்பழ மிஞ்சி யார்ந்தநீர்
விளைந்த வல்விளை வரிசி வேரியும்
வளைந்த மின்னனார் மகிழ்ந்து சண்பகம்
உளைந்து மல்லிகை யொலியல் சூடினர்.

என்ற செய்யுளால் அறியப்பெறுகின்றது.

ஒரு சிற்றரசன் தன்பால் இல்லாததையும் உண்டாக்கும் ஆற்றல் பெற்றவன் என்பதற்கு உவமையாக, காட்டிடத்தே பனி மிகுதலால் தீக்கடைகோலின் உதவியால் இல்லாத சிறுதீயை உண்டாக்கும் இடையனைக் கூறியுள்ளார்

* * * * * பனிமிகப்
புல்லென் மாலைச் சிறுதீ ஞெலியும்
கல்லா இடையன் போலக் குறிப்பின்
இல்லது படைக்கவும் வல்லன்

—(புறப்பாட்டு)

என்ற பாட்டில் உறையூர் முதுகூத்தனார் என்னும் புலவர். இதனால் இத்திங்களில் சிறுதீயை உண்டாக்கிக் குளிர்காயுஞ் செய்தி அறிவிக்கப் பெறுகின்றது.

பண்டைத்தமிழ் இலக்கியங்களில் இவைபோன்ற பல செய்திகள் பரக்கக் காண்கலாம். விரிவஞ்சி அவற்றைக்கூறாது விடுத்தனம் இங்கு.

மார்கழி மாதம் ஹேமந்தருது. வடமொழியில் இம்மாதத்தைத் ' தநுர்மாஸம் ' என்பர். ' மாஸங்களில் மார்கழி மாஸமாகிறேன்' என்று கண்ணன்தானே கீதோபநிடத்தில் அருளிச் செய்கை யாலே வைஷ்ணவமான மாஸம். வில்லாண்டான் மாதமாகை யால் அங்ஙனம் அழைக்கப்படுகிறதுபோலும். இம்மாதத்து வரும் சுக்லபக்ஷ்ம் ஏகாதசி ஸ்வர்க்கேகாதசி, வைகுண்ட ஏகாதசி எனவும் பெயர்பெறும். அன்றுதான் ஸ்வர்க்கவாசல் திறப்பு என்கிறவிசேஷம்.

ஸ்ரீவைஷ்ணவ ஆலயங்களில் நடக்கும் இராப்பத்து பகற் பத்து உத்ஸவம் இம்மாதத்தில்தான். இதன் வரலாற்றினைச் சற்று விவரிப்பாம்.

மாதங்களிற் சிறந்த மார்கழித் திங்களில் சுக்லபட்ச ஏகாதசி தொடங்கி திருவரங்கம் பெரிய கோயில் பெரிய பெருமாள் வட

மொழி வேதத்தைக் கேட்டுப் போருவது வழக்கமாயிருந்தது. அதற்கு ''அத்யய நோத்ஸவம்'' (அத்யயநம்-வேதம் ஓதுதல்) என்று பெயர். கோயிலில் பல கைங்கரியங்களைச் செய்தருளின திருமங்கை மன்னன் ஒரு நாள் பெருமாள் திருமுன்பே திரு நெடுந் தாண்டகத்தைத் தேவகானத்தாற்பாடி மனம் உருகி நிற்க, அதற்குத் திருவுள்ளம் உவந்த அரங்க நகரப்பன் 'உமக்கு வேண்டுவது யாது?' எனவினவ, கலியனும் பணிந்து 'நாயன்தே! நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய தமிழ் வேதமாகிய திருவாய் மொழியை மார்கழி மாஸத்தில் நடக்கும் திருவத்யய நோத்ஸவத்தில் வடமொழி வேதத்துடனே திருச்செவி சாத்தியருளவேணும்' என்று விண்ணப்பம் செய்ய பெருமாளும் அவ்வாறே அநுக்ரஹம் செய்தார். அந்நியமனப்படியே மங்கை வேந்தனும் திருக் கார்த்திகையானதும் திரவரங்கத்தில் உள்ள கோயில் பரிஜநங்க ளுடன் ஆழ்வார் திருநகரிக்குப் பயணமாகி அங்கு நின்று ஆழ்வாரை எழுந்தருளப் பண்ணிக் கொண்டு வந்து ஆண்டு தோறும் சுக்லபக்ஷ ஏகாதசி தொடங்கித் தினம் ஒவ்வொரு பத்து வீதம் திருவாய் மொழி பத்துப்பத்தையும் பத்து நாள் உத்ஸவத்தில் வடமொழி வேதத்தோடு கேட்பித்தருளினர். இவ்வாறு நிகழ்ந்து வந்த உத்ஸவம் காலக்ரமத்தில் நடந்தேருமல் நின்று விட்டது. வெகு காலத்திற்குப்பின் பெரும்பூதூர் வந்தவள்ளல், திருவரங்கச் செல்வனரின் திருவுள்ளத்தை யடியொற்றித் திருவாய் மொழி யோடு மற்ற முதலாயிரம் முதலிய பிரபந்தங்கட்கும் வேதஸாம்யம் உண்டு என்பது தெளியுமாறு மார்கழி மாதத்துச் சுக்லபட்ச ஏகாதசிக்கு முன்பு பத்து நாட்களில் முதல் இரண்டு ஆயிரத்தை யும், ஸ்ரீ வைகுண்ட ஏகாதசி தொடங்கும் பத்து நாள்களில் திருவாய்மொழி ஆயிரத்தையும், திருவாய்மொழி முற்றுப் பெற்ற மறுநாள் இயற்பா ஆயிரத்தையும் நம்பெருமாள் வடமொழி வேதத்தோடு திருச்செவிசாத்தும்படி ஏற்பாடு செய்தருளினர். அவ்வாறு செய்கையில் திருக்கார்த்திகையானதும் திருவரங்கத்தி லுள்ள பரிஜனம் பலவற்ருேடும் ஆழ்வார் திருநகரிக்குப் பயண மாகி நம்மாழ்வாரை எழுந்தருளப் பண்ணிக் கொண்டுவந்து கலியனையும் முன்னிட்டு உத்ஸவத்தை விமரிசையாக நடப்பிக்க லானர். திருக்கார்த்திகையானதும் ஆழ்வாரை எழுந்தருளப்

பண்ணிக்கொண்டு வந்து திவ்யப்ரபந்தங்களைப் பெரிய பெருமாள் திருச்செவிசாத்தியருளுங்கால வெல்லையே இந்தத் தென்மொழி வேதத்துக்கு அத்யாயோத்ஸர்ஜந காலமாகும். முதற்பத்து நாள்களில் நடக்கும் உத்ஸவம் மத்தியான்ன காலத்திற்குள் திவ்யப்ர பந்தத்தைப் பெருமாள் திருச்செவிசாத்தும்படி இருப்பதால் அது ''பகற்பத்து'' எனவும், பின்பு ஸ்ரீ வைகுண்ட ஏகாதசி தொடங்கி நடக்கும் உத்ஸவத்தில் திருவாய்மொழிப்ரபந்தம் இராத்திரியில் திருச்செவிசாத்தும்படி யிருப்பதால் அது ''இராப்பத்து'' என்றும் வழங்குவதாயிற்று. இப்படி நடந்து வரா நின்ற உத்ஸவம் கால கௌடில்யத்தால் ஆழ்வார் திருநகரியினின்று ஆழ்வாரை எழுந் தருளப் பண்ணிக்கொண்டு வந்து நடத்துவது கஷ்ட சாத்யமாய் விட பிற்காலத்துள்ள பெரியோர் திருவரங்கம் திருப்பதியில்தானே ஏறியருளப் பண்ணின நம்மாழ்வாரைக் கொண்டு உத்ஸவத்தைச் சிறப்பாக நடத்தலானார்கள்.

தமிழ்மொழியில், இயல், இசை, நாடகம் என்று வழங்குகின்ற மூவகைத் தமிழில் இயற்பாதவிர மற்றை மூவாயிரங்களும் இசைத் தமிழும் நாடகத் தமிழும் ஆகையால் அப்பிரபந்தங்களை அறையர், பண்ணிசையோடு சேவிப்பதும், அபிநயிப்பதும், மற்றையோரா யிரமும் இயற்றமிழ் என்பதை யாவரும் அறியுமாறு முன்னை யோர், இயற்பா (இயற்றமிழால் ஆன பா) என்று நாமதேயம் இட்டதற்கு ஏற்ப அவ்வாயிரத்தை அறையர் சேவிப்பதில்லையாக, இதர ஸ்ரீ வைஷ்ணவர்கள் பெருந்திரளாக இருந்து அநுஸந்திக்க நம் பெருமாள் கட்டளையால் இன்றும் இருபத்தொரு நாள்களில் திவ்யப்ரபந்தம் முழுவதையும் திருச்செவிசாத்துதல் நடந்து வருகின்றது. இதனைத் திருவரங்கத்திருப்பதி சென்று சேவிக்கப் ராப்தியில்லாதவர்கள் குறையொருவாறு தீர அவ்வுத்ஸவம் பலதிவ்ய தேசங்களில் நடந்து வருகின்றது. தொண்டர்கள் கண்டு மகிழ்ந்து வாழ்ந்து வருகின்றனர்.

தேவதைகளுக்குப் பிராஹ்ம முகூர்த்தம் ஆனதாலே நில வுலகில் உள்ள மாந்தர் எல்லாம் அதிகாலையில் எழுந்து சனி நீராடித் தத்தம் தெய்வங்களுக்கு விசேஷ பூஜை நடத்துவர் இத்

திங்களில். இம் மாதத்திற்கு நாட்கள் இருபத்தொன்பது. ஆண்டாள் என்ற பெரியாழ்வார் திருமகளார் முப்பது பாசுரங்கள் அடங்கிய 'திருப்பாவை' என்றதோர் சீரிய பிரபந்தத்தைச் செய்தருளியுள்ளார். இதனை "உபநிடதம்" எனப் போற்றுவர் சான்றோர். இதனை முழுதும் பிரதிதினமும் திருவாராதனத்தில் ஸேவித்து ஒவ்வொரு தினத்துக்கு ஓரோர் பாசுரமாக ஓதி மகரஸங்கராந்தியன்று சாற்று முறை செய்து வருகின்றனர் ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயஸ்தர்கள். மாணிக்கவாசகர் "திருவெம்பாவை" என்ற அரிய நூலை அருளியுள்ளார். சிவபக்தர்கள் அதனை இத்திங்களில் ஆலயங்களிலும் இல்லங்களிலும் ஓதி வருகின்றனர். இவ்விரண்டினையும் நன்கு பயில்வதே நம்மவர் கடன்.

மார்கழி மாதம் திருவாதிரை அருணோதய புண்ணியகாலம் "ஆருத்ராதர்சனம்." 'மார்கழி மாதம் திருவாதிரை நாள் வந்தாற் கலிதீரும்' என்பது ஆப்தவசனம். 'ஆதிரைக்களி' அனைவரும் அறிந்ததே.

மேலும் இம்மாதத்தில் அநேக ஆழ்வார், ஆசாரியர் முதலியோர் அவதரித்துள்ளனர். தொண்டரடிப்பொடியாழ்வார், பெரிய நம்பிகள், ஸ்ரீரங்க நாராயண ஜீயர், கோயில் பெரியதிருவடிகள் அவதாரமும், இயற்பகை நாயனர், மானக்கஞ்சார நாயனர், சாக்கிய நாயனர், வாயிலார் நாயனர், சடைய நாயனர் முதலியோர் முக்திபெற்ற திருநாட்களும் இத்திங்களிலேதான். வையமெலாம் இருள் நீக்கும் மணி விளக்காய்த்திகழ்ந்து வரும் திருவஹோபிலத்தானத்து நாற்பது, நாற்பத்தொன்றுவது பட்டங்களில் மூர்த்தாபிஷிக்தர்களாய் உலகம்போற்றும் பெற்றியராய் நீள்புகழ் நிறுவிய அழகிய சிங்கர்களின் அவதாரங்களும் இம்மாதத்திலேதான் எனின் இத்திங்களின் பாக்கியமே பாக்கியம் எனப்பகருவதன்றி வேறு யாதுரைக்க இயலும்?

ஆங்கில வருடப்பிறப்பும் இம்மாதத்திலேயே வருகின்றது. மஹாசபைகள் எல்லாம் கூட்டுகின்றகாலம். கர்ப்போட்டாரம்பமும் இம்மாதத்திலேதான்.

"மார்கழிநோன்பு"; "மார்கழிநீராட்டம்" என்பவற்றின் விவரங்களை அறிய அவாவுடையோர் முன்னர் எடுத்துக்காட்டப் பட்ட திருப்பாவை, திருவெம்பாவை முதலிய சீரிய நற் பிரபந்தங்களை நன்கு கற்று நலன்பெறலாம்.

ஸ்ரீவில்லிபுத்தூர்ச் செல்வியாம் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி மார்கழிமாதத்தின் பெருமையினை முழுதுணர்ந்தன்றோ,

மார்கழித்திங்கள் மதி நிறைந்த நன்னாள்

என முதலடியிலேயே முற்றும் மங்கலமொழிகளமையப் பாடி யுள்ளார்.

மாலே! மணி வண்ணா! மார்கழிநீராடுவான்
மேலையார் செய்வனகள்

எனக்கூறியதன் அழகினை நன்கு நோக்கித் தெளிக.

மார்கழித்திங்களின் மாண்பினை ஒருவாறு எடுத்து இயம் பினம். மாலோலன் மாதமாகிய இதன் சீர்மையை முற்றும் உரைக்க முழுதுணர் நீர்மையினோரே உரியர். எப்பரிசாக எவர் எது உரைப்பினும் அவர் உலகளந்த உத்தமன் திருவருளைப்பெற்று இன்புறுவர் என்பது ஆன்றோர் அபிமதம். வாழ்க உலகெலாம்.

ஸ்ரீ:

நாச்சியார் நாடகம்.

[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரெ. திருமலை அய்யங்கார், தமிழ் வித்துவான், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்]

" வாழி திருப்பாவை பாடு மடப்பாவை
வாழி யரங்க மணவாளர்—வாழியவன்
மாடுநிற்கும் புள்ளரையன் வாழி பெரியாழ்வார்
பாடுநிற்கும் வேதாந்தப் பா. "

உலகத்தில் மிக்க பழமையான இலக்கணமும் இலக்கியமும் நம் செந்தமிழ் மொழிக்கே இருந்தன என்பது பன்மொழி ஆராய்ச்சியாளர் கண்டமுடிபு. தமிழ் இலக்கியங்கள் பண்டைக் காலத்தே இயல், இசை, நாடகம் என முப்பகுதியுடையனவாக அமைந்து விளங்கின. இயற்பகுதியே இலக்கியம் என ஏனை மொழிகளுள் வழங்கவும், இசைக்கு ஒரு பெரும் பிரிவுங் கூத்திற்குப் பிறிதொரு பகுதியுஞ் சேர்த்து மூன்றாக நமது சந்த மிகு தமிழ்மொழி வழங்கிய பான்மையை நோக்குமிடத்து, உள்ளம், மொழி, உடல் என்னும் மூன்றையும் நன்கு காட்டும் மூன்று கண்ணாடிபோல முத்தமிழ் நிலவியது என்பது ஒருதலை. உள்ளக்கருத்தின் நயங்களை இயற்றமிழ் உணர்த்தும் மொழிக்கு இனிமை பயப்பது இசை; உடற் செய்கையாற் கருத்தை விளக்குவது நாடகம் என்ப.

தமிழ் இலக்கியமானது தொல்காப்பியம் முதலிய இலக்கணம் உண்டாவதற்கு முன்பே செம்மையாய நிலையை அடைந்திருந்தது என்பது வெள்ளிடை விலங்கல். பண்ணமருந்தமிழ் மொழி முத்திறத்தினதாக அமைந்து விளங்கியதை

" சங்கத் தமிழ்மூன்றுந் தா "

என ஔவையாரும்,

" முத்த மிழ்த்துறை யின்முறை போகிய
உத்த மக்கவி கட்கொன் றுணர்த்துவன் "

எனக் கல்வியிற் பெரிய **கம்பநாட்டாழ்வாருங்** கூறியவற்றான் அறியலாம்.

அவற்றுள், இயற்றமிழ் இலக்கண இலக்கியங்களே இப்பொழுது காணப்படுகின்றன. இசை நாடகங்களின் இலக்கண இலக்கியங்கள் காணக்கிடைத்தில. மேலும், நாடகம் என்பது தமிழ்நூல் முறைப்படி இக்காலங் காண்பது அரிது. நம்முடைய கோயில்களில் நடக்கும் திருவிழா முதலியன யாவும் நாடகங்களே. நாடகத்தே நமது அகம் நாடவேண்டும். பண்டைக்காலத்து நாடகங்களில் ஒருவகை நாடகம் இப்போதும் காணப்படுகின்றது. அதன் பாட்டுக்கள் யாவும் தெய்வ இசை வாய்ந்தனவாகும். அவ்வாறு அமைந்திருப்பினும் அது உலக இயலையும் தன்னுட் கொண்டு இயன்று, கற்பார் வியப்புங் களிப்புங்கொள்ளும்படி செய்யவல்லதாகவே இருக்கின்றது. அன்றியும் அது தெய்வபக்தி வாய்ந்தவர்களைப் பரவசப்படுத்தி ஆநந்த சாகரத்தில் அமிழ்த்தும் சிறப்பியல்பினைக்கொண்டு மிளிர்கின்றது. அதுவே " பாவை " என்னும் நூல் ஆகும். அது நம் துய்ய தமிழில் ஒருவகையின் வகுத்து உரைக்கப்பட்ட பதினோராடல்களில் ஒன்று. அப்பதினோராடல்களாவன :— (1) அல்லியம், (2) கொட்டி, (3) குடை, (4) குடம், (5) பாண்டரங்கம், (6) மல்லாடல், (7) துடி, (8) குடியம், (9) பேடு, (10) மரக்கால், (11) பாவை என்பன.

" பதினோ ராடலும் பாட்டுங் கொட்டும்
விதிமாண் கொள்கையின் விளங்க வறிந்தாங்கு "

—(சிலப்பதிகாரம். அரங்கேற்றுகாதை)

" 14-5. பதினோராடலும்.........அறிந்தாங்கு என்றது—அல்லியம் முதற்கொடுகொட்டி ஈருய்க் கிடந்தனவும், அவற்றுக்குரிய பாட்டுக்களும் அக்கூத்துக்களின் விகற்பங்களுக்கெல்லாம் அமைந்த வாச்சியக்கூறுகளும், மாட்சிமைப்பட்டநூல்களில் விதித்த முறைமையாலே விளங்க அறிந்தென்க."

பதினோராடலாவன :—

“ கடையமயி ராணிமரக் கால்விந்தை கந்தன்
குடைதுடிமா லல்லியமல் கும்பம்—சுடர்விழியால்
பட்டமதன் பேடுதிருப் பாவையரன் பாண்டரங்கம்
கொட்டியிவை காண்பதினோர் கூத்து.”

இவை தெய்வ விருத்தி.

இவை இரண்டு கூறுபடும் ; என்னை?

“ அல்லியங் கொட்டி குடைகுடம் பாண்டரங்க
மல்லுட னின்றாட லாறு.”

“ துடிகடையம் பேடு மரக்காலே பாவை
வடிவுடன் வீழ்ந்தாட லைந்து ”

இவை அசுரரைக் கொல்ல அமரராடின.

64 “ அவரவ ரணியுட னவரவர் கொள்கையின்
நிலையும் படிதமு நீங்கா மரபிற்
பதினோ ராடலும் பாட்டின் பகுதியும்
67 விதிமாண் கொள்கையின் விளங்கக் காணாய்.”

—(சிலப்பதிகாரம். கடலாடு காதை)

“ அங்ஙனங் கூறப்பட்ட அவரவருடைய அணிகளுடன் அவரவருடைய கொள்கையாற் பொருந்தி நின்றாடலும் வீழ்ந்தாடலுமாகிய அவரவரை நீங்காத மரபினையுடைய பதினொருவகைப் பட்ட ஆடலும், அவ்வாடல்கட்கேற்ற பாடல்களின் வேறுபாடும், அவற்றிற்கு விதித்த மாட்சிமைப்பாட்டோடு அவற்றைப் புலப்படக் காண்பாயாக ” என்ற இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகார அடிகளாலும், அடியார்க்கு நல்லார் உரையாலும் பதினோராடல்களின் விவரம் நன்கு தெரியப்படும்.

இனி, “ பாவை ” என்பதனைக் கூறும் மேற்கோள்களைக் காண்பாம்.

“ பாவை திருமக ளாடிற் றதற்குறுப்
போவாம லொன்றுடனே யொன்று.”

என்பது அடியார்க்கு நல்லார் அரங்கேற்றுகாதை பதினான்காவது அடியில் காட்டும் மேற்கோள்.

" திருவாடல் பாவை யதற்குறுப்புத் தேரின்
ஒருவா திரண்டுட னொன்று."

என்பது யாப்பருங்கல விருத்தி, ஒழிபியல், 'மாலைமாற்றே' என்னுஞ் சூத்திர உரையிற் காட்டப்பெற்ற மேற்கோட் செய்யுள்.

" செருவெங் கோல மவுணர் நீங்கத்
திருவின் செய்யோ ளாடிய பாவையும் "

—(சிலப்பதிகாரம். கடலாடுகாதை)

" அவுணர் வெவ்விய போர் செய்தற்குச் சமைந்த போர்க் கோலத்தோடு மோகித்து வீழும்படி கொல்லிப் பாவை வடிவாய்ச் செய்யோளாகிய திருமகளால் ஆடப்பட்ட பாவையென்னு மாடலும் ". என்ற சிலப்பதிகாரப் பகுதியால் திருமால் திருமார்பில் 'அகலகில்லேன் இறையும்' என்று உறைபவராகிய பெரிய பிராட்டியார் நாடகம் ஆடினர் என்பதும், அவர் இதனை யாது காரணமாக ஆடினரோ ? எனின், அவுணர் செருவெங்கோல நீங்க என்பதும் போதரும்.

இதுகாறும் கூறியவாற்றால் 'பாவை' என்பது பண்டை யோராற் பாடப்பட்டு வந்த பதினோராடல்களில் ஒன்றும் என்பதும், அது மிகவும் தொன்மை உள்ளது என்பதும், மூன்றுறுப்புக்களுடன் கூடியது என்பதும், அப்பாவை நாடக மாடினவர் செந்தாமரைப் பொகுட்டில் செம்மாந்து வீற்றிருக்கும் உலக மாதாவாகிய பெரிய பிராட்டியார் என்பதும், அவுணர் பொராது அஞ்சி அவியுமாறு திருமாமகளால் ஆடப்பெற்ற பெருமையையுடையது அவ்வாடல் என்பதும் நன்கு தெளியலாம்.

பாவை என்னும் நூலில் வரும் பொதுப் பொருள் பெண்கள் தாம் வழிபடும் கடவுளை நோக்கி நோன்பு நோற்றுத் தாம் விழைந்த பயனைப் பெறுதலாம்.

இங்ஙனமாகிய 'பாவை' என்னும் நாடக நூற்களுள் இப்பொழுது முற்றும் கிடைக்கப் பெற்றுள்ளவை இரண்டு. அவை கோதை நாச்சியார் அருளிச் செய்த திருப்பாவையும். சைவசமயாசாரியார்கள் நால்வருள் ஒருவராகிய மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த திருவெம்பாவையும் ஆகும்.

இவ்விரண்டனுள், வேதம் அனைத்துக்கும் வித்தானதும், பாதகங்கள் தீர்ப்பதும், பரமனடி காட்டுவதுமாகிய திருப்பாவை சமயச் சார்பின்றி இலக்கண இலக்கியங்களின் அளவே நின்று நோக்கும் புலவர்களால் எவ்வண்ணங் கொள்ளப்படுவதற்கு உரியது என்பதை ஆராய்வாம்.

திருப்பாவை என்னுந் தொடரில் 'திரு' என்பது அடை மொழி. அது பல பொருளொரு சொல். செல்வம், இலக்குமி, அழகு, மேன்மை என்பன முதலிய பல பொருள்களைத் தரும் சொல்லாமேனும் ஈண்டு அது மேன்மை என்னும் பொருளதாய் நின்றது. பாவை என்பது பதுமை எனப் பொருள் பெறும். இவ்விரு சொற்களுங் கூடி இத்தொடர் மொழி மேன்மையாகிய பாவை என்ருதலின் பண்புத் தொகை நிலைத்தொடர் ஆம். இத் தொடரில் பாவை என்பது உவமையாகு பெயராய்ப் பெண்களை உணர்த்த, அது பொருளாகு பெயராய்ப் பெண்களால் நோற்கப் படும் நோன்பை உணர்த்த, அது காரியவாகு பெயராய் அந் நோன்பைத் தெரிவிக்கும் நூலை உணர்த்தி நின்றது. ஆதலின், இது மும்மடியாகு பெயர்.

இனிப் 'பாவை' என்பது இருமடியாகு பெயராய் நின்று நோன்பை உணர்த்த, அது 'திரு' என்பதனோடு கூடி 'மேன் மையாகிய நோன்பை உணர்த்தும் நூல் என்னும் பொருளதா யிற்று' எனக் கொண்டு அதனை அன்மொழித் தொகைப்பெயர் என்று கூறலாகாதோ என ஐயம் நிகழலாம்.

'திருவாடல் பாவை னொன்று' எனவும்
'செருவெங்கோல பாவையும்' எனவும்

முன்னர்க் குறித்தவற்றுள் 'பாவை' என்பது அடைமொழியின்றி நின்றே நூலை உணர்த்தலின், மும்மடியாகுபெயர் என்றே கூறு தல் வேண்டும்.

இனிப் 'பாவை' என்பது உவமவாகு பெயராய்ப் பெண்களை யுணர்த்த, அது பொருளாகு பெயராய்ப் பெண்களின் செய்தி யைத் தெரிவிக்கும் நூலை உணர்த்திற்று எனக்கொண்டு இருமடி யாகு பெயர் என்னலாகாதோ? என்பார்க்கு, திருப்பாவையின்

இரண்டாம் பாசுரத்தில் ' நாமும் நம் பாவைக்கு ' என்ற இடத்தில் 'பாவை' என்பது நூலை உணர்த்தாமல் நோன்பையே உணர்த்தலின் ஆங்கு அதனை இருமடியாகு பெயர் என்றே கொள்ளவேண்டியிருத்தலின், அதுவும் பொருந்தாது என்க.

'திருப்பாவை' என்பது நாச்சியார் அருளிச்செய்த பாவை நூலுக்குக் காரண இடுகுறிப் பெயராய் அமைந்துள்ளது. இதன் பாசுரத் தொகை முப்பது. இதன் ஈற்றுப் பாசுரம் நாந்திச் செய்யுள். இறுதிப்பாட்டு ஒன்று நீங்கலாக மற்ற இருபத்தொன்பது பாட்டுக்களும் ' ஏலோ ரெம்பாவாய் ' எனவும், இறுதிப்பாட்டு 'எம்பாவாய்' எனவும் முற்றுப்பெறும். அவ்விருபத் தொன்பது பாசுரங்களும் இந்நாடக நிகழ்ச்சிக்கு உரியனவாகும். திருப்பாவையின் பாசுரங்கள் தனிச் சொல்லும் சுரிதகமும் இன்றி வந்த தரவு கொச்சகக்கலிப்பாக்களே. இவற்றுள் ஒவ்வொன்றும் எட்டடி கொண்டு வந்திருக்கின்றது. இப்பாசுரங்களுள், பெரும்பாலன முழுதும் வெண்டளை வரப்பெற்றுள்ளன. சில பாசுரங்கள் கலிப்பாவிற்குரிய கலித்தளையும் வெண்டளையும் கலந்தும், சில பாசுரங்கள் வெண்டளையும் நேரொன்றாசிரியத்தளையும் கலந்தும் வரப்பெற்றிருக்கின்றன. திருப்பாவையின் பாசுரங்களில் நேரீற்று ஈரசைச்சீர்கள் பல வந்திருக்கின்றன.

திருப்பாவையின் பொருள் அமைப்பைக் காண்போம்.

முதற் பாசுரத்தில் ' இது நோன்புக்கு உரிய மார்கழித் திங்களாய், மதி நிறைந்த நன்னாளாய் இருக்கின்றது. கண்ணனே நமது விழாவை முற்றுவித்துத்தருபவனாக அமைந்துள்ளான். ஆதலால் நோன்பின் பொருட்டு வரவிருப்பம் உடைய பெண்களே ! வருவீர்களாக என்று அழைத்தல் கூறப்பெற்றிருக்கின்றது. இரண்டாம் பாசுரத்தில், கண்ணன் பிரிவால் உறக்கம் இன்றி இருந்த அவ்வாயர் சிறுமியர்கள் தம்முடன் வந்து கூடிய சிறுமியர்களை நோக்கி ' நாம் நோன்புக்காகச் செய்தற்கு உரியன இவை, என்று கூறுதலும், மூன்றும் பாசுரத்தில் அச்சிறுமியர்கள் தம்முடன் வந்து கூடிய பெண்களை நோக்கி, ' நோன்புக் கெனக் கொண்டு நீராடுவோமாயின் மாதமும்மாரி பெய்யும், நாடு முழுதும் செழிக்கும் ' என்று உரைத்தலும், நான்காம் பாசுரத்தில்

அப்பெண்கள் மழைக்கு உரிய தேவதையை நோக்கி, 'உலகில் உள்ளார் அனைவரும் வாழும்படியாகவும், நாங்களும் மார்கழி நீராடும்படியாகவும், மழையைப் பெய்வாயாக' என்று வேண்டுதலும், ஐந்தாம் பாசுரத்தில் அப்பாவையர் 'நாம் தூயோமாய் வந்து கண்ணபிரான் திருநாமங்களைச் சொல்லி அப்பெருமானைத் தூமலர்களைத் தூவித்தொழுது பாடிச் சிந்தித்தால் முன் செய்த பாவங்களும் இனிவர நிற்கும் பாவங்களும் தீயினிற் பஞ்சுபோல் உருமாய்ந்து போகும்' என்று கூறுதலும் சொல்லப் பெறுகின்றன.

ஆரும் பாசுர முதல் பதினைந்தாம் பாசுரம் வரையிலும் உள்ள பத்துப் பாசுரங்களில் அங்ஙனம் முன்னே எழுந்த பெண்கள் தம்மோடு வந்து கூடிய மற்றைப் பெண்களோடு சென்று உறக்கம் இன்றிக் கண்ணன் குணங்களைச் சிந்தித்துக் கொண்டிருத்தலால் எழுந்திருக்க மாட்டாமல் அணையிற் கிடக்கும் பெண்களை எழுப்புதல் கூறப்பெற்றிருக்கின்றது.

பதினும் பாசுர முதல் இருபத்தொன்பதாம் பாசுரம் வரையிலும் உள்ள பதினன்கு பாசுரங்களில் அந்நங்கையர்கள், நந்தகோபர் திருமாளிகையை அடைந்து, அவரது அரண்மனைக் காவலனையும், வாயிற் காவலனையும் எழுப்பி, அப்பால் நந்தகோபரையும், யசோதைப் பிராட்டியாரையும், கண்ணனையும், பலராமரையும், நப்பின்னைப் பிராட்டியாரையும் எழுப்புதலும், கண்ணனைச் சீரிய சிங்காசனத்தின்கண் வீற்றிருக்கச் சொல்லிப் 'போற்றி போற்றி' எனப் பல் படியாலுந்துதித்து 'எங்கள் நோன்புக்கு வேண்டுவனவற்றைச் செய்து தருக' என வேண்டுதலும், பின்னர் 'எங்கள் உண்மையாகிய உள்ளக் கிடக்கை இது' என்று கூறுதலும் கூறப் பெற்றுள்ளன.

ஆதலின், முதல் ஐந்து பாசுரங்களிற் கூறப்பட்ட நிகழ்ச்சிகள் ஒரு தொடராய் ஒரு களத்தில் அமைதற்கு உரியனவாகவும், ஆறு முதல் பதினைந்து வரையிலும் உள்ள பத்துப் பாசுரங்களிற் கூறப்பட்ட நிகழ்ச்சிகள் மற்றொரு களத்தில் அமைதற்கு உரியதாகவும், பதினறு முதல் இருபத்தொன்பது வரையிலும் உள்ள பதினன்கு பாசுரங்களிற் கூறப்பட்ட நிகழ்ச்சிகள் ஒரு தொட

ராய் வேறொரு களத்தில் அமைதற்கு உரியனவாகவும் அமைந்து இருக்கின்றன. திருப்பாவையின் கண் அமைந்துள்ள இம் மூன்றுறுப்பு,

" திருவாடல் பாவை யதற்குறுப்புத் தேரின்
ஒருவா திரண்டுட னொன்று "

என்பதிற் கூறிய மூன்றுறுப்பாம் போலும் என்று தோன்றுகின்றது. பேரறிஞர் நன்கு ஆராய்வாராக.

இருபத்தாறும் பாசுரத்தில் நோன்புக்குப் பிரமாணம்,

" மாலே மணிவண்ணா மார்கழி நீராடு வான்
மேலையார் செய்வன கள் "

என்று சான்றோர்களின் ஆசாரமே என்றார் நாச்சியார். இப் பாவை நாடகமாடினார் அலர்மேல்மங்கை என்று, இதில் வரும் நோன்பு சான்றோர் ஆசாரம் என்றதை வலியுறுத்துவதாகும்.

" வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி யவர்கட் டாக லான "
—(தொல்காப்பியம்-பொருள்-மரபியல்-சூத்திரம் 92)

என்பதனை ஈண்டு நோக்குக.

" சூடிக் கொடுத்த சுடர்க்கொடியே தொல்பாவை
பாடி யருளவல்ல பல்வளையாய்."

என்ற திருப்பாவைத் தனியனில் பாவையை அநாதி ஆசாரஸித்தமானது எனக் கூறியது குறிக் கொள்க.

" **நாச்சியார் நாடகம்** " பட்டர்பிரான் கோதைதாமே " **சங்கத் தமிழ்மாலை** " என வழங்கும் பெருமை பெற்றது. வாழ்க கோதை தமிழ். வளர்க நல்லறம். உயர்க உலகெலாம்.

" மெல்லிய பஞ்சடி யுந்துவ ராடையு மேகலையும்
வல்லியை வென்ற மருங்குமுத் தார வனமுலையும்
சொல்லியல் வன்மையும் வில்லிபுத் தூரம்மை தோளழகும்
முல்லையை வென்ற நகையுமெல் லாமென்றன் முன்னிற்குமே."

இலக்கம்.	வெளியீட்டின் பெயர்.	வள்ளலார் பெயர்.
17.	புகழ் மாலை.	தமிழன்பர்.
18.	கம்பர் தருங் கண்ணன்.	ஸ்ரீமான் பி. சேஷாத்திரி அய்யங்கார் அவர்கள்.
19.	முக்கோற்பகவர்.	ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸகோபாலய்யங்கார் அவர்கள்.
20.	ஸ்ரீ வீரராகவ மாலை.	ஸ்ரீமான் ரா. கிருஷ்ணய்யங்கார் அவர்கள்.
21.	திருமாமகள் மாலை.	திருப்புகழ் மணி பிரும்மஸ்ரீ டி. எம். கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள்.
22.	திருநரசிங்கர் மாலை.	ஸ்ரீமான் கமலாபுரம் ஆர். ராமஸ்வாமி அய்யங்கார் அவர்கள் திருத்தேவியார் ஸ்ரீரங்கநாயகி அம்மாள்.
23.	அழகியசிங்கர் மாலை.	ஸ்ரீமான் எம். பி. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் அவர்கள்.
24.	பொய்கையார் மாலை.	ஸ்ரீமான் மங்கலம் இராமாநுஜய்யங்கார் அவர்கள்.
25.	ஸ்ரீ ஆண்டாள் சந்திரகலா மாலை.	சிறந்த தேசிக பக்தர்.
26.	வாரணமாயிரமாலை.	ஸ்ரீமான் பி. எஸ். திருமலை அய்யங்கார் அவர்கள்.
27.	ஸ்ரீ பார்த்தசாரதியம்மான் பாமாலை.	ஸ்ரீமான் பி. எஸ். கோவிந்தராஜய்யங்கார் அவர்கள்.
28.	தமிழுரேத்தும் ஸ்ரீமணவாளமாமுனிகள்.	சந்தமிகு செந்தமிழ்ச் செல்வர்.
29.	திருச்சின்னமாலை.	ஸ்ரீமான் கே. துரைசாமி அய்யங்கார் அவர்கள்.
30.	திருவேங்கடவர்மாலை.	நான்மறையாளர்கள்.
31.	மார்கழி மாலை.	ஸ்ரீமான் பூண்டி அச்சுத கோபாலாச்சாரியார் அவர்கள்.

பெறும் இடம் : ஆநந்த பிருந்தாவநம்,
ஸ்ரீ மௌனசுவாமிகள் மடத்துத் தெரு, அம்பத்தூர்.

† இவ்வடையாள மிடப்பெற்றவை இப்போது கைவசமில்லை.